Registered No. M 5068

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆடி௴ 18௳ 2—8—1948 ஹிஜ்ரி 1367 ரம்ஜான்௴ 25௳ திங்கட்கிழமை. } இதழ் 28

ஈதுல் பிதர்

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் 1912-ல் எழுதியது.

(மொழி பெயர்ப்பு:—மௌலானா K. A. அப்துல் மஜீத், பண்டாரவாடை.)

உலகத்திலுள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வருஷத்தில் சில தினங்கள் விசேஷ நாட்களாக இருந்து வருகின்றன. அவைகளில் ஒவ்வொன்றையும் தங்கள் சமூக ஞாபகார்த்த தினமெனக்கருதி அவர்கள் நேசித்து வருகின்றனர். ஒவ்வொருவரும் அவ்விசேஷ நாட்களில் சுகத்துக்குரிய காரியங்களை ஆடம்பரமாகவே செய்கிறார்கள். ஆயினும் முஸ்லிம்களின் இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும், சந்தோஷமும் விசனமும், பிறப்பும் இறப்பும் ஆண்டவனுக்காகவே உள்ளதாகும் முஸ்லிம்களின் விசேஷ தினங்கள் உலக இன்ப சுகங்களை அனுபவிப்பதற்காக அல்ல ஆண்டவனுடைய அருளைப்பெறுதற்காகவே ஏற்பட்டவை. உள்ளம் ஆண்டவனை மறந்து நாவு ஆண்டவனை ஜபிக்காமலிருக்கும் நாளே முஸ்லிம்களுக்கு பெரிய துக்க நாளாகும் தலையால் வணங்கி, உள்ளத்தால் நினைத்து நாவால் ஆண்டவனை ஜபிக்கும் நாளே முஸ்லிம்களின் சந்தோஷ நாளாகும்.

ஆண்டவனை வழிபடுவதற்குச் சாதனமாக முஸ்லிம்களுக்கு இரண்டு தினங்கள் விசேஷ நாட்களாகக் கிடைத்தன. அதில் முதலாவது 'ஈதுல் பிதர்' (ரம்ஸான் பண்டிகை). இந்நாள் ஆண்டவனின் கிருபைகளை வருஷித்த மாதத்தின் கடைசி நாளாகவும் நற்காலத்தின் ஆரம்ப தினமாகவும் இருக்கின்றது.

ரம்ஸான் மாத கடைசிப் பத்தில் தான் உண்மை வேதமான திருகுர்ஆனின் ஒளி முதன்முதலாக வீசிற்று. கோடிக்கணக்கான மக்களின் கொள்கையிலும் செய்கையிலும் இருந்த இருளைப் போக்கி நேர்வழியைக் காட்டிற்று. மானிடத் தன்மையின் பிரகாசம் தீயவர்களின் தீச்செயல்களால் மங்கி இயற்கையான அழகு பாதகத்தின் திரையால் மூடப்பட்டு ஆண்டவனுடைய விதிகள் உதாசீனம் செய்யப்பட்டு அவனால் அனுப்பப்பட்ட தூதர்கள் நிர்மாணித்த சத்தியத்தின் கட்டிடங்கள் பாபப்பெருவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த இருள் சூழ்ந்த காலத்தில் ஆண்டவனுடைய நற் செய்தியான திரு குர்ஆன் உலகுக்கு நல் வழியைக்காட்டி தீமைகளை அகற்றிசந்தோஷத்தை உண்டுபண்ணிற்று. அசத்தியத்தையும், மடமையையும் வணங்கும் அடிமை வாழ்வைப் போக்கி புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கிற்று. மேற்கூறிய அனைத்தும் ரம்ஸான் மாதத்தின் கண் உண்டானவையாகும்.

உலகத்தில் அபார மாறுதல் உண்டு பண்ணி அதற்கு விசேஷப் பெருமையை அளிக்கும் 'லைலதுல் கதர்' என்னும் இரவு இதே மாதத்தில் ஓர் இரவாகும் முற்காலத்தில் ஆண்டவனால் அனுப்பப்பட்ட தூதர்கள் உலகத்தாருக்கு நல்வழியைக் காட்டி உத்தமர்களாக்கிய காலத்தினின்றும் ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் இவ்விரவு பெருமை மிகுந்ததென ஆண்டவன் அறிவித்திருக்கின்றான். ரம்ஸான் மாதத்தில் உலகத்துக்கு அளிக்கப்பட்டி

ருக்கும் பாக்கிய மடங்கலும் இவ்விரவில் அமையப் பெற்றிருக்கின்றன உலகத்தில் அதிகாரம் வகிக்கும் உரிமையை ஒருஜாதியாரிடமிருந்து மற்றொரு ஜாதியாருக்கு மாற்றினதும் இவ்விரவிலேதான.

ஆண்டவனின் விதிகளின்படி 'பனிஇஸ்ராயீல்' ஜாதியார் உலகில் இரண்டாயிரம் வருஷங்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுக்கும் அவர்களின் தேசத்துக்கும் அவர்களுடைய ஆட்சிக்கும் உலகத்தில் ஆண்டவன் விசேஷ பெருமையை அளித்திருந்தான். இதேமாதத்தின் 'லைலதுல்கதர்' என்னும் இரவிலேதான் ஆண்டவனின் நியதிப்படி உலக ஆட்சியின் உரிமை 'பனீ இஸ்ராயில்' ஜாதியாரிடமிருந்து 'பனி இஸ்மாயில்' ஜாதியாருக்கு மாற்றப்பட்டது. உலகத்தின் அதிகார உரிமைகளை கொண்டாடுபவர்கள் தீய வழிகளைவிட்டு சதா ஆண்டவனை வணங்கி வரவேண்டுமென்பது ஒரு முக்கிய நிபந்தனை. அப்படிப்பட்டவர்களுக்கே உலக ஆட்சியின் உரிமை வழங்கப்படும் இம் முக்கிய நிபந்தனையை அலட்சியம் செய்து ஆண்டவனால் அளிக்கப்பட்ட உலக ஆட்சியை உண்மையான முறையில் மதிக்காமல் அவருடைய உத்திரவுக்கு மாறு செய்கிறவர்களிடமிருந்து அப்பாக்கியங்கள் உடனே பரிக்கப்பட்டு வேறு நல்லவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு வருகின்றன. அசுத்தமான காரியங்களை செய்வதற்கென்று ஆண்டவன் உலகத்தைப் படைக்கவில்லை. எனவே உலகத்தை சுத்தமாகவைத்திருக்கும் பொறுப் பேற்றவர்களையே ஆண்டவன் தனக்குப் பிரியமானவர்களாக ஏற்படுத்திக்கொள்ளுகின்றார். உலகத்தை அசுத்தம் செய்து நன்மையை கெடுத்துவிடக்கூடிய பாதகர்கள் உலக ஆட்சி நடத்த ஆண்டவனுக்கு சம்மதமில்லை. ஆகவே ஆண்டவனின் கிருபை 'கேஹேசீனா' மலையிலிருந்து 'பூகபீஸ்' மலைக்கும் 'ஷாம்' தேசத்திலிருந்து 'ஹிஜாஸ்' தேசத்திற்கும் மாறியது 'பனீஇஸ்ராயில்' களின் பெருமையை ஒழித்து முஸ்லிம்களுக்கு கீர்த்தியை அளித்த மாதம் இதுவேயாகும்.

இதற்கு அடுத்த மாதமாகிய 'ஷவ்வால்' இஸ்லாமின் முன்னேற்ற மாதமாகும். இம் மாதத்தின் முதல் தினத்தையே 'ஈதுல்பிதர்' என்னும் விசேஷ தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டவனின் கிருபையும் திரு குர்-ஆன் இறங்கிய காலமும் சதா நினைவிருக்கவேண்டுமென்பதுவும் முஸ்லிம்கள் அனைவரும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி வணங்க வேண்டுமென்பதுமே அதன் தாத்பர்யம்.

'ஈதுல்பிதர்' விசேஷதினம் முஸ்லிம்களுக்கு ச்ந்தோஷ தினமாகவும் ஆண்டவன் கிருபையை ஞாபகப்படுத்திக்கொள்ளும் தினமாகவும் முஸ்லிம்களுக்கு கீர்த்தியை அளித்த தினமாகவும் ஜெயபேரிகை முழங்கிய தினமாகவும் இருந்துவந்த அக்காலம் இன்னமும் இருக்கின்றதா? கிலாபத்தின் கிரீடத்தை அணிய நம்முடைய தலை நிமிர்ந்து நின்ற காலமும் பெருமையும் கீர்த்தியும் நம்மோடு இருந்தகாலமும் லட்சிய சித்தியான காலமும் நம்மீது ஆண்டவனின் நிழலிருந்த காலமும் ஆண்டவன் அளித்த ஆட்சியை நாம் ஆண்டுவந்தகாலமும் நமக்குக் கிடைத்திருந்த உயர் அந்தஸ்துக்கள் அனைத்தும் இன்று சரித்திரத்தின் பழங் கதைகளாகிவிட்டன. உலகத்தின் இதர சமூகத்தினர் நமக்கு படிப்பினையைத் தரும் கருவிகளாக மாறிவிட்டோம். ஆண்டவன் நமக்களித்திருந்த நற்பாக்கியங்களை பாதகச் செய்கைகளால் இழந்துவிட்டோம். ஆண்டவன் நமக்களித்திருந்த ஆட்சியின் பெருமையை அலட்சியம் செய்து முற்றிலும் இழந்தோம். உலக ஆட்சியும் பாத்தியதைகளும் நமக்கு ராசியாகவில்லாமல் போய்விட்டன ஆகவே விசேஷ தினத்தில் சந்தோஷம் நம்மை விட்டுப்பிரிந்து போய்விட்டது சுகம் சந்தோஷத்தின் காலம் சென்றுவிட்டது. ஆட்சியிலும், அரசாங்கத்திலும், சிம்மாசனத்திலும் இருந்து சில விசேஷ தினங்களை கண்டுகளித்தோம். உலகத்தார் நமக்கு அளவற்ற மதிப்பைக் கொடுத்து மரியாதை செய்த விசேஷ நாட்களையும் பார்த்திருக்கிறோம்.

நல்லுணர்ச்சியுடன் முன்னேற்ற மடைந்திருப்பவர்களுக்கே இக்காலத்திய விசேஷ கினங்களில் சந்தோஷம் உண்டு. தங்கள் பெருமை அழியும் பொழுது கூடவே அழிந்துபோனவர்களை பாக்கியசாலிகளென்று கூறலாம். நாமோ நம் பெருமை கீர்த்திகளை எல்லாம் இழந்தும் உலகில் ஈனர்களைப் போலிருந்து காலத்தைக் கழித்து வருகிறோம் சிலர் நம்மை இழித்துக் கூறும் சொற்களை நம் செவிகள் கேட்கவும் நம் க்ஷீணதசையை கண்டு கண்கள் நீர் சொரியவும் நம்மைப்பார்த்து பிறர்ஜாக்கிரதையாக இருக்கவுமே நாம் உலகில் தங்கியிருப்பதாகக் கூறலாம்.

உலகில் முன்னேற்றத்துக்கு ஆரம்ப தினமாயிருந்த விசேஷ நாள் நமக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணக்கூடியதுதான். அத்தினம் முதற்கொண்டே திரு குர்-ஆனின் ஆட்சிகாலம் நமக்குக் கிடைத்தது தேகம், இதயம் என்னும் கண்டங்களில் நம் ஆட்சியை நடத்திவந்தோம். இரண்டாயிர வருஷ பெருமைகள் பாதகச் செய்கைகளால் 'பனீ இஸ்ராயிலிடமிருந்து பரிக்கப்பட்டு நம் செய்கைகளின் பலனாக நமக்கு அளிக்கப்பட்டன என்ற நினைவு, இவ் விசேஷ தினத்தின் காலையில் நமக்கு வராமலிருப்பதில்லை. இறைவனை வழிபடாததால் உலகிலிருந்து

வந்த இருளையும் நம் நற் செய்கைகளால் ஏற்பட்ட ஒளியையும் இத்தினம் நமக்கு நினைவூட்டி வந்திருக்கின்றது. இத்தினத்தை ஒரு ஞாபகார்த்த தினமெனக் கூறுவது உண்மையே. ஆயினும் சந்தோஷத்தின் ஞாபகார்த்தமாக இருந்து வந்த இத்தினம் இப்போது விசனத்தின் ஞாபகார்த்த தினமாக இருந்துவரலாம். இவ்விசேஷ தினத்தில் நமக்கு அளிக்கப்பட்டிருந்த பெருமையையும் கீர்த்தியையும் ஞாபகப் படுத்திக் கொள்வதற்கில்லையாயினும் அவைகளை நாம் இழந்து விட்டோமென்பதையாவது ஞாபகப்படுத்திக்கொள்ளக்கூடிய துக்கதினமாக இருந்துவருகிறது. நம் நல்வாழ்க்கையின் அதிர்ஷ்டத்தை நினைவூட்டிவந்த தினம் நம் ஈன வாழ்க்கையின் துரதிர்ஷ்டத்தை நினைவூட்டும் தினமாக மாறிவிட்டது. உலகத்தில் நம் ஆட்சிக்கு அடிகோலி நமக்குச் சந்தோஷத்தைக் கொடுத்துவந்த தினம் நம் இதயத்திலுள்ள புண்ணை குத்திவிடும் தினமாக மாறியிருக்கிறது. நம் ஜெயத்தையும் கீர்த்தியையும் பூரணமாக்கி நம்மை சந்தோஷத்தில் மூழ்கச் செய்திருந்த தினம் துயரக்கடலில் விழுந்து தவிக்கும் தினமாக சம்பவித்திருக்கிறது. திரு குர்-ஆன் இறங்கிய ஞாபகார்த்தத்தை முன்னிட்டு சந்தோஷதினமாக இருந்து வந்தஸ்திதியில் திரு குர்-ஆனின் சட்ட திட்டங்களை நாம் அலட்சியம் செய்துவிட்ட இக்காலத்தில் சந்தோஷத்திற்கு வழி யேது?

உலகத்தில் சந்தோஷத்தைக் கொடுக்கும் காலம் மிகவும் குறைவாகவே கிட்டும் எனவே வருஷம் பூராவிலுமுள்ள ஒரே ஒரு சந்தோஷ தினத்தைநேசிக்காமலிருக்க முடியாது. ஆகவே இவ்விசேஷதினத்தை முன்னிட்டு சந்தோஷமடைய வேண்டிய சந்தர்ப்பத்தைக் கெடுத்து விசனத்தை உண்டுபண்ணவேண்டுமென்று நான் உத்தேசிக்கவில்லை. ஆயினும் நான் என்னசெய்வேன்! என் இதயம் விசனத்தால் துடிக்கின்றது. அதை புலம்பாமல் இருக்கும்படிச்செய்ய என்னால் முடியவில்லை. மற்றவர்கள் சந்தோஷப்படும் காலமே விசனத்தில் சிக்குண்டிருக்கும் இதயத்துக்கு அதிக விசனத்தை உண்டு பண்ணுமென்பது எவரும் மறுக்க முடியாததொரு உண்மை ஒரு காலத்தில் பல புத்திரர்களைப் பறிகொடுத்த தாய் ஒருத்தி பண்டிகை தினத்தில் தன்னுடைய எஞ்சியுள்ள புத்திரர்களைக் கண்டு களிக்காமல் இறந்து போனவர்களில் ஒவ்வொருவரையும் நினைத்து கண்ணீர் சொரிந்துகொண்டு இருப்பாளல்லவா!

தன் அறிவீனத்தால் சகல பொருளையும் இழந்துவிட்ட ஒரு ஏழை விசேஷதினத்தில் மற்றவர்களின் ஆடை, ஆபரணங்களைப் பார்த்ததும் தான் இழந்தவைகளை நினைக்காமலிருப்பது சாத்தியமா? ஈத் என்னும் இவ்விசேஷதினம் சந்தோஷ தினமாக எனக்குப் புலப்படவில்லை. ஆயினும் நிச்சமாக விசனத்தை மூட்டும் தினமாகவே படுகின்றது முஸ்லிம்கள் உணர்ச்சியற்றவர்களாய் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து கிடப்பதால் சந்தோஷ மென்றால் என்ன? விசனமென்றால் என்ன? என்றுகூடத் தெரியாமல் மோசம் போகின்றனர். ஒரு தினத்தின் சந்தோஷத்தில்மூழ்கி சதா அடையவேண்டிய விசனத்தை மறந்துவிட்டார்கள். இவர்களுக்கேன் சந்தோஷ ஆரவாரம்? சகல நன்மைகளையும் இழந்து பரிதவிக்கும் இவர்களுக்கு ஆடம்பரமெதற்கு? சந்தோஷத்தையும் இன்ப சுகத்தையும் கொடுக்கக்கூடிய வஸ்துக்களில் நெருப்பை அள்ளிப்போடுங்கள் சந்தோஷ தினத்திற்கென்று தயாரிக்கப்பட்ட உயர்தரமான ஆடைகளை கிழித்தெரியுங்கள் வாசனை திரவியங்கள் அடங்கிய சீசாக்களை கவிழ்த்துவிட்டு அவைகளில் மண்ணையும் புழுதியையும் நிரப்பி தலையில் கொட்டிக் கொள்ளுங்கள். பட்டும், ஜரிகை ஆடைகளுமணிந்து பகட்டும் காலம் மலையேறிவிட்டது. மனிதன் தன் நிலைமையை மறந்துவிடச்செய்யும் சூழ்ச்சிக்கு ஆளாகி சந்தோஷ ஆரவாரம் செய்ய முற்படுகிறான். இவ்விசேஷ தினத்தின் ஆடம்பரங்களும் வைபவங்களும் என்னுடைய வார்த்தைகள் உங்களுடைய செவிகளில் பிரவேசிக்காமல் தடுக்கலாம். இஸ்லாம் உலக முழுவதிலேயுமுள்ள மக்களை சகோதரர்களாக்கும் மதம் என்பதை நீங்கள் அறியவேண்டும். ஒரு தேசத்தில் ஒரு தேகம் பூமியில் விழுந்து துடித்துக் கொண்டிருக்கையில் நீங்கள் சந்தோஷம் அடைவீர்களாயின் உங்கள் மீது ஆண்டவனின் முனிவு இரங்கக்கடவது. தேசத்தில் உங்கள் சகோதரர்களுக்குள்ள தேசாபிமானத்தை குற்றமெனக்கூறி அவர்கள் தூக்கிலிடப்படுகையில் அதற்காக கண்ணீர் சொரியாமலிருக்கும் கண்கள் உடைந்து போகக்கடவன. இஸ்லாமின் சகோதரத்துவம் தேசம் அல்லது வகுப்பு என்னும் எண்ணத்தைதைவிட பரிசுத்தமானது. ஒரு வானத்தின் கீழ் வாழும் எல்லாமக்களையும் ஓர் உருவமாகப் பார்க்க ஆண்டவன் பிரியப்படுகின்றான். ஆகவே தேசத்தின் ஒரு பாகத்தில் கஷ்டம் ஏற்படுமாயின் தேச முழுவதிலும் அக்கஷ்டம் இருந்தே தீரும். உலகத்தின் ஒரு பாகத்தில் மக்களின் இரத்தம் சிந்தப்படுமாயின் உங்கள் கண்கள் கண்ணீர் சொரியாமலிருப்பது ஆச்சரியமல்லவா? உங்கள் அறியாமையின் மயக்கத்தால் சென்றுபோன துக்ககரமான சம்பவங்களை மறந்துவிட்டீர்களாயினும் இப்பொழுது நடந்துவரும் சம்பவங்கள் உங்களை விழிக்கச்செய்யாதா? உலகத்தில் வாழ யோக்கியதை யற்றவர்களாக ஆகிவிட்டோமாயின் நாம் அழிந்து போகத்தாமதமேன்? எந்தப் பெருமை கீர்த்தியில் நமக்குபாகமில்லையோ அதை மற்

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 2—8—'48 திங்கட்கிழமை { இதழ் 28

லீகர்களுக்கு நேருஜீ எச்சரிக்கை.

இந்திய அரசியல் அரங்கத்தில் முஸ்லிம் லீகின் விஷவித்தை விதைத்து வெள்ளையர்கள் வேலிகட்டி வளர்த்தனர், இல்லையேல் முஸ்லிம் லீக் ஜனித்த அன்றே மரித்திருக்கும். லீகுடன்கூடவே கலகங்களும் வளர்ந்தன நாற்பது வருஷங்கள் வரை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அதனால் ஏற்பட்ட பாதகமும் வெள்ளையர்களுக்குக் கிடைத்த சாதகமும் வர்ணிக்க முடியாது. 'இருந்தும் கெடுத்தான், இறந்தும் கெடுத்தான் பாவி' என்று சொல்லுவதைப் போல் முஸ்லிம் லீக் நாற்பது வருஷங்கள் வரை இருந்தும் கெடுத்தது. ஆகஸ்ட் 15-ல் இந்தியாவில் இறந்தும் கெடுத்தது. வெள்ளையர்கள் வெளியேறியவுடன் லீகின் நாற்பது வருஷத் துவேஷப் பிரசாரத்தின் விளைவுகள் வெளிப்பட்டன. தங்களுடைய விஷமப் பிரசாரத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளின் பயங்கரத்தன்மையை முன்கூட்டியே அறிந்திருந்த லீக் தலைவர்கள் முன் எச்சரிக்கையாக வெள்ளையர்களின் பாதுகாப்புடன் கம்பி நீட்டிவிட்டனர். பாமர முஸ்லிம் பொது மக்கள் அடைந்த கஷ்ட நஷ்டங்களுக்கு எல்லையில்லை. முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் பாகிஸ்தானுக்கு சமீபமாக இருந்தும் இன்று அங்கு முஸ்லிம் லீக் இல்லை. அங்குள்ள லீகர்களே லீகை ஒழித்துக் கட்டிவிட்டனர். இதைத்தான் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு சென்னைப் பொதுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். ஆயினும் சென்னை மகாணத்திலுள்ள ஒருசில பொறுப்பற்ற பதவிப் பித்தர்கள் இங்கு லீகை நீடித்து வைத்திருக்கின்றனர். அவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளாலும் பொட்டணங் கட்டுவதற்கும் பிரயோஜனப்படாத ஒருசில பஞ்சைத்தாள்கள் செய்யும் வகுப்புவாதப் பிரசாரத்தினாலும் சென்னை மாகாண முஸ்லிம்களுக்கே அபாயம் ஏற்படும்போல் தோன்றுகிறது. இந்தியப் பிரதமர் சென்னையில் தங்கிய இரண்டு, மூன்று தினங்களுக்குள் பஞ்சைத் தாள்களின் விஷமப்பிரசாரத்தை உணர்ந்து கொண்டு விட்டார். "லீகைச் சேர்ந்த யாரோ ஒருவனுக்காக நம் அடிப்படையை மாற்றமுடியாது. வேண்டுமானால் அவன் வெளியேறட்டும். எவ்வளவு சீக்கிரம் வெளியேறுகிறானோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது" என்று எச்சரித்தார். சென்னை மாகாணத்திலுள்ள லீக் பிரமுகர்களும் விஷமப்பிரசாரம் செய்துவரும் லீக் பஞ்சைத்தாள்களும் குறிப்பாக சென்னைமாகாண பொது மக்களும் அவருடைய எச்சரிக்கையால் விழிப்படைய வேண்டும். இந்தியாவின் இதர பாகங்களில் நடந்ததைப்போன்ற துக்ககரமான சம்பவங்கள் இங்கு நடக்கவில்லை. லீகை நீடிக்க ஒரு சிலருக்கு துணிச்சல் ஏற்பட்டிருப்பதற்கும் காரணம் அதுதான். இந்த மாகாணத்தின் அமைதியையும் குலைத்துவிடவே அவர்கள் பார்க்கின்றனர் அதன் விளைவு முஸ்லிம்களுக்கு என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. ஹைதராபாத் சமஸ்தானம் சென்னை மாகாணத்தை அடுத்திருக்கிறது நிஜாமின் பிடிவாதமும் ரஜாக்கார்களின் காலித்தனமும் சேர்ந்து எவ்வித நிலைமையை ஏற்படுத்தப் போகின்றன என்று முன்கூட்டிச் சொல்ல முடியாது இம்மாகாணத்தில் அது எதிரொலிக்காமலிருக்க வேண்டுமாயின் லீக்கும் லீக் பிரசாரமும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். லீக் தலைவர்கள் அதைச் செய்யப் போவதில்லை. கலகங்கள் தோன்றினால் ஓடிப்போக அவர்களுக்கு நன்றாய்த்தெரியும் இந்தியாவின் இதர பாகங்களில் லீக் தலைவர்கள் அப்படித்தான் செய்திருக்கின்றனர். எனவே முஸ்லிம் பொதுமக்கள் தைரியத்துடன் முன்வந்து லீகைக் கலைக்கும்படி வற்புறுத்த வேண்டும். "லீகின் தாயகம் பாகிஸ்தான்; இங்கு அதற்கு இடங்கிடையாது" என்று இந்தியப் பிரதமரே அறிவித்து விட்டபிறகு லீக் இந்தியாவில் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. அதை வைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற வெட்கங்கெட்ட செய்கை வேறெதுவும் இருக்கமுடியாது. இப்பிரச்னையில் கவனம் செலுத்துமாறு மாகாண சர்க்காரை வேண்டுகிறோம். நாற்பது லட்ச முஸ்லிம்களை பாதுகாக்க சென்னை சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறது. நம் சர்க்கார் ஜனநாயக சர்க்கார் என்பது வாஸ்தவந்தான் இருப்பினும் விஷமிகள் ஜனநாயகத்தை தவறாக பிரயோஜனப் படுத்திக்கொண்டு அபாயகரமான கட்டத்தை அடையும்போது சர்க்கார் பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. ஒருசில விஷமிகளின் தனி நபர் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரத்திற்காக நாற்பது லட்சம்முஸ்லிம்கள் பாதிக்கப்படுவதை எந்த ஜனநாயகமும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவே லீக் விஷமிகளையும், லீக் பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்தையும் தடைசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் அதைச் செய்யுமென்று நம்புகிறோம்.

இளைஞர் எழுச்சி வேண்டும்.

[நாகை V. E. M. ஹமீது யூசுபுவத்தனி]

ஒரு சமூகமோ, நாடோ முன்னேற்றமடைய வேண்டுமானல் அதற்குரிய திறவுகோல் இளைஞர்கள் கையில்தானிருக்கிறது. அவர்கள்தான் தங்கள் உழைப்பினல் அதைத் திறந்து உள்ளே சென்று அவைகளைப் பிரகாசிக்கச் செய்யமுடியும். இதனல் தான் ஒரு ஆங்கிலக் கவிஞரும் “Boys of to-day, will be citizens of To-morrow” என்று கூறுகின்ருர். அக்கவிஞர் சொல்வது பிரகாரம் இன்று இளைஞராயிருப்பவர்கள்தான் எதிர்கால பிரஜைகளாக வேண்டி இருக்கிறது ஆகவேதான் அவர்களின் முன்னேற்றமும் அவசியமாக இருக்கின்றது. நம் நாட்டுத் தலைவர்களாகிய மௌலானு ஆஸாத், அஸப்அலி, ஜவஹர், ராஜாஜி முதலானேர்கூட “நாங்கள் சுதந்திரத்தையடைவதற்கான பாதையைக் காட்டி, சுதந்திரத்தைக்கொண்டு வந்துவிட்டோம். நாங்கள் வயோதிகர்களாயிருப்பதால் இனி விடாமுயற்சியுடன் பூரண விடுதலையைப் பெறுபவர்களும், நாட்டை உலகில் சிறப்புற்ற நாடாகத் திகழ வகை செய்பவர்களும் இளைஞர்கள்தான்” என்று கூறியுள்ளார். இத்தாலி தேச சரித்திரத்தை எடுத்துப் பார்த்தாலும், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற தேச சரிதங்களை எடுத்துப் பார்த்தாலும் இளைஞர்கள் செய்த புரட்சிகளால் தான் அந்நாடுகளும், அச்சமூகங்களும் முன்னேற்றமடைந்தனவென்று தெரிகிறது. கிரேக்க அறிஞராகிய சாக்ரடீஸ்கூட இளைஞர்களுக்கே வினுக்களின் மூலம் அறிவுச்சுடரை விளக்கினர் என்பதே அறியப்படுகிறது. 1940 ல் பிரான்ஸ் தேசம் ஜெர்மன் அரக்கர்களால் கபளீகாம் பண்ணப்பட்டபோது இங்கிலாந்திலிருந்து கொண்டு ஜெனரல்டிகால் பிரெஞ்சு மக்களுக்குச் செய்த ஒரு ரேடியோப்பிரசங்கத்தில் “பிரெஞ்சு இளைஞர்களே! நம்முடைய நாடாகிய பிரெஞ்சுநாடு அக்ரமக்காரர்களாகிய ஜெர்மன், இத்தாலிக்காரர்களால் சுவாஹாப் பண்ணப் பட்டிருக்கின்றதென்பதை அறிவீர்கள். நம் நாட்டின் எதிர்கால சுபிட்ச வாழ்வு இளைஞர்களாகிய உங்கள் கையில்தானிருக்கிறது ஆகவே இளைஞர்காள்! விடுதலைப் பெறுவதற்கும், ஆக்ரமிப்பாளர்களை விரட்டுவதற்கும் வேண்டிய உன்னத வேலைகளில் ஆங்காங்கே ஈடுபடுங்கள்” என்று கூறியுள்ளார். நேசதேசத்தினரால் ஜெர்மன் நாடுகபளீகரம்பண்ணப்படுமென்பதைஉணர்ந்த ஹிட்லர் தனது கடைசி பிரசங்கத்திலும் “நாஜி இளைஞர்களே! நம் நாட்டை அன்னியன் கபளீகரம் செய்து நம்மைப்பல விதத்திலும் ஒடுக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிருன். ஆகவே நீங்கள் எக்காலத்திலும் எங்களை நீ வெல்ல முடியாது என்பதை பகிரங்கமாக போர் புரிவதன் மூலம் பறை சாற்றுங்கள். எதிர்காலம் உங்களுடையதே” என்றே கூறினன். வகுப்புவாதி ஜின்னுவின் பிரசங்கங்களிலும் அடிக்கடி “முஸ்லிம்களின் எதிர்கால வாழ்வு முஸ்லிம் இளைஞர்களின் கையில் தானிருக்கிறது” என்று பகர்ந்திருப்பதைக் கேட்டிருக்கிருேம். ஆகவே, நாமும் சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமானல் இளைஞர்களின் எழுச்சியே வேண்டும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி,)

றவர்களுக்காக நாம் காலி செய்யாமலிருப்பதேன்? ஆயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வரையில் நாம் உலகத்தில் நல்லவிதமாகக் காலம் கழித்தோம் சகல சுகங்களையும் அனுபவித்தோம். ஆட்சியின் சிம்மாசனங்களிலும் அமர்ந்திருந்தோம். தேசங்களை ஆண்டோம். இப்பொழுது நாம் ஆளப்படுகின்ருேம்.

கல்வியின் உறைவிடங்களாக இருந்த நாம் கல்வியின்மையின் காரிருளில் மூழ்கி யிருக்கின்ருேம். நிகரற்ற இன்பங்களை அனுபவித்தோம். ஆயினும் இன்று விசனத்தில் சிக்குண்டிருக்கிருேம். இந்த விசனம் உதாரணமற்றதாகவேயிருக்கின்றது. நம்மை அழித்து விட வேண்டுமென்று காலம் தீர்மானித்திருக்குமாயின் உடனே அழித்து விடட்டும். நாம் அழிந்து போவோமாயினும் நம்மால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் சின்னங்கள் அழிந்து போவது எளிதல்ல. சரித்திரம் நம்மை மறந்துவிடுவது சாத்தியமல்ல. உணர்ச்சியை தூண்டத்தக்க நம் நிலைமை உலகத்திலுள்ள மற்றவர்களுக்கு நம் நினைவையூட்டி இரத்தக் கண்ணீர் சொரியச் செய்யும் இரவின் கடைசிபாகத்தில் இதை எழுதிக்கொண்டிருக்கின்றேன். என் இதயம்துடித்துக் கொண்டிருப்பதுடன் கண்ணீரும் சொரிகின்றது. என்பார்வை ஒரு நட்சத்திரத்தின் மீது விழுந்திருக்கிறது. அவநம்பிக்கை என்ற இரவின் இருள் பயங்கரமானதாயிருப்பினும் நம்பிக்கை ஊட்டும் வகையில் ஒரு கடைசி நட்சத்திரமும் பிரகாசித்துக் கொண்டிருப்பதை பார்க்கிறேன். துண்டு துண்டாக பிளக்கப்படும் காய்ந்த மரத்தைப் பார்த்த இக்கண்கள் காய்ந்த கிளைகள் தளிர்விடவும் பார்த்திருக்கின்றன.

இந்தியா பாகிஸ்தான் உளவாளிகள்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உளவாளிகள் கைது செய்யப்படும் வேகத்தைப்பார்த்தால் இரண்டு டொமினியன்களிலும் சரிபாதி இல்லாவிடினும் கால் பங்கு ஜனத்தொகையாவது உளவாளிகளாயிருக்கலாமென்று எண்ண வேண்டியிருக்கிறது பாகிஸ்தானிலோ இன்றைய நிர்வாகத்திலுள்ள குறைகளை சுட்டிக்காட்டுபவர்கள், ஜனநாயகத்துக்கு மாறானது என்று கண்டிப்பவர்கள், ஜனநாயக நிர்வாகத்தைக் கோருபவர்கள், சுருங்கச் சொன்னால் இன்றைய அதிகாரவர்க்கத்தின் எதிரிகள் அனைவருமே உளவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டு உள்ளே தள்ளப்படுகின்றனர். ஆனால் இவ்வித நடவடிக்கைகள் அங்குள்ள பெரிய மனிதர்களுக்கு எதிராக பாகிஸ்தான் கர்த்தாக்களால் எடுக்கப்படுகின்றன. அதாவது காயிதே ஆஜம் அல்லது அவருடைய தாஸர்களான மந்திரிகளின் உத்திரவால் கான் அப்துல் கப்பார்கான், ஜி எம். ஸையத் போன்ற பெரிய மனிதர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இந்தியாவில் அப்படியல்ல. பாகிஸ்தான் ஹைதராபாத் அனுதாபிகளுக்கு இங்கு குறைவில்லையாயினும் கவர்னர் ஜெனரல் அல்லது மந்திரிகளால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இவ்விஷயத்தில் அவர்களுக்கு அவ்வளவு அக்கரை இருப்பதாகவும் தெரியவில்லை. தங்களுடைய திறமையை காட்டுவதற்காக எதற்கும் தயாராக இருக்கும் போலீஸ் சேவகர்கள்தான் உளவாளிகளை கைது செய்வதில் தீவிரமாய் ஈடுபட்டிருக்கின்றனர்.

நாள் தப்பினாலும் நாட்டில் உளவாளிகள் கைது செய்யப்படும் செய்திகள் மட்டும் தப்புவதில்லை. கைது செய்வதற்கு பாகிஸ்தான் அல்லது ஹைதராபாத் பிரசாரம் செய்துகொண்டிருந்ததாக பெரும்பாலும் காரணம் காட்டப்படுகிறது. தனிப்பட்ட முறையில் சர்க்காரின் ஏதாவதொரு நடவடிக்கையை கண்டிப்பதும், காயிதே ஆஜம் என்று செதுக்கப்பட்ட ஏதாவதொரு வஸ்துவை வைத்திருப்பதும், பாகிஸ்தானிலுள்ள யாராவது ஒருவரின் விலாசம் ஜேப்பில் கண்டுபிடிக்கப்படுவதும்கூட சில சந்தர்ப்பங்களில் உளவாளி என்று தீர்மானிக்கப் போதுமான சாட்சியமாகக் கருதப்படுகிறது.

இது எப்படி ஆரம்பமாயிற்று? என்று முடிவடையும்? உளவாளிகள் கைது செய்யப்படும் விஷயத்தை கவனிக்கவேண்டிய அவசியம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறதா? இல்லையா? தெரியவில்லை.

உளவாளிகள் கைது செய்யப்படும் சம்பவங்களின் தன்மை, அவர்களின் மீது சாட்டப்படும் குற்றங்களின் விநோதம் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆயினும் சில அடிப்படை விஷயங்களைக் குறித்து அரசாங்கத்தைக் கேட்காமல் இருக்க முடியாது. அப்படிக்கேட்க அனைவருக்கும் உரிமையுண்டு.

இந்திய சர்க்கார் பாகிஸ்தானையும், ஹைதராபாதையும் எதிரி நாடுகளாக பாவிக்கின்றதா? அல்லது அவ்விரு நாடுகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றதா? அப்படி இல்லையென்றால் இவ்விதம் உளவாளிகள் கைது செய்யப்படுவதன் அர்த்தமென்ன?

ஒரு புறம் இரண்டு டொமினியன்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்த ஒப்பந்தங்கள் செய்வதுடன் இரண்டு டொமினியன்களின் உறவை பாதிக்கக்கூடிய வகையில் ஒன்றும் எழுதவேண்டாமென்று பத்திரிகைகளுக்கு ஆலோஜனையும் கூறப்படுகின்றது. இன்னொருபுறம் உளவாளிகளைக் கைது செய்யும் வேலை இரண்டு டொமினியன்களிலும் மும்முரமாக நடந்துகொண்டுமிருக்கிறது.

பாகிஸ்தான் ஒரு அன்னியநாடு என்பது உண்மைதான். ஒரு வஸ்துவின் மேல் "பாகிஸ்தான் வாழ்க" "காயிதே ஆஜம் வாழ்க" என்று செதுக்கப்படுவது எவ்வளவுதான் வெறுக்கத் தகுந்த செய்கையாக இருப்பினும் சட்டபூர்வமாக குற்றம் என்று தீர்மானிப்பதற்கில்லை. நம் சர்க்கார் "முஸ்தபா கமால் வாழ்க" "லெனின் வாழ்க" "வியட்நாம் வாழ்க" "இந்தோனேஷ்யா வாழ்க" என்ற கோஷங்களுக்காகவும் கைது செய்யுமா? இல்லையேல் தன் கீழ் உள்ள அதிகாரிகளின் இன்றைய போக்கைப்பற்றி சர்க்கார் கவனிக்க வேண்டியிருக்கும்.

செய்யப்படும் கைதுகள் அனைத்தும் நியாயமற்றவை என்று நாம் சொல்லவில்லை. அதில் சிலர் அல்லது பலர் தேச நலனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். அவர்களை உளவாளிகள் என்று சொல்லி தண்டிப்பதைக் காட்டிலும் தேசத் துரோகிகள் அல்லது நாசவேலைகளில் ஈடுபட்டவர்களாகக் கருதி கடுந்தண்டனை விதிப்பது நன்மை பயக்கமுடியும்.

அவர்கள்மீது சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம். தங்களுடைய நிரபராதத் தன்மையை நிரூபித்துக் காட்ட அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்

கிழக்குப் பாஞ்சால சமஸ்தான யூனியன்.

ஜூலை 15-ல் கிழக்குப் பாஞ்சால சமஸ்தான யூனியன் அமைந்து விட்டது. ராஜ பிரமுகராக பாட்டியாலா மகாராஜா பிரமாணமெடுத்துக் கொண்டார். சர்தார் வல்லபாய் படேல் ஆரம்பித்த சமஸ்தானங்களை தொகுதிகளாக சேர்க்கும் வேலையும் முடிவடைந்துவிட்டது. இந்த யூனியனில் கீழ்வரும் ஆறு சமஸ்தானங்கள் இருக்கின்றன பட்டியாலா, பரீத்கோட், ஜபந்த், நாப், கபூர்தலா, மாலீர் கோட்லா யூனியனின் மொத்த விஸ்தீர்ணம் 10,000 சதுர மைல் ஜனத்தொகை முப்பது லட்சத்துக்கும் அதிகம். பட்டியாலா மகாராஜா ராஜப்பிரமுகராகவும், கபூர்தலா மகாராஜா உபராஜ பிரமுகராகவும், நியமிக்கப்பட்டனர். உயிருடன் இருக்கும் வரை அவர்கள் ராஜ, உபராஜ பிரமுகர்களாயிருந்து வருவர்.

இந்திய உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேல் யூனியனை திறந்து வைத்தார். இந்திய கவர்னர் ஜெனால் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் வாழ்த்துச் செய்தி மூலம் "யூனியனின் அமைப்பு சரித்திரப் பூர்வமான ஓர் சம்பவ" மென்று பாராட்டினர். இவ்வைபவத்தில் சர்தார் பட்டேல் நிகழ்த்திய பிரசங்கம் யூனியனின் திறப்பைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது சர்க்காரின் கொள்கை பற்றிய பல முக்கிய விஷயங்களை வெளியிட்டார்.

ஆயினும் பாடியாலா மஹாராஜாவின் தேசபக்தி சம்மந்தப்பட்டவரை ஸர்தார் பட்டேலின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை அத்துடன் மஹாராஜாக்களின் தேசபக்தி, மக்கள் மீதுள்ள அன்பின் பயனுகவே எல்லாம் நடக்கிறது என்பதையும் ஏற்பதற்கில்லை.

பொது மக்களின் சரித்திரப் பூர்வமான விரோதிகளுக்கு தீங்கிழைக்கப்பட்ட தங்கள் பிரஜைகள் மீது திடீரென்று அன்பு சுரந்து விடுமென்றோ அல்லது அவர்களுடைய தலைமையில் மக்கள் சுபிட்சத்தை நோக்கி முன்னேற முடியுமென்றோ நம்ப முடியாது. சமஸ்தானதிபதிகளுக்கு வாரொட்ட சந்தர்ப்பம் இருந்து வரும்வரை இம்மாதிரியான சமஸ்தான யூனியன்கள் மக்களுக்கு நன்மை பயக்குவதற்கு பதிலாக பிற்போக்காளர்களின் கோட்டைகளாகவே இருந்து வருமென்பது நிச்சயம்.

சமஸ்தான மக்களுக்கும் புத்திமதி கூறி "ஒரு மந்திரிசபை அமைக்கும் விஷயத்தில் சமஸ்தான மக்கள் ஒத்துழைக்க முன் வராவிட்டால் சர்க்கார் என்னதான் செய்ய முடியும்" என்று கேட்டார் ஸர்தார் பட்டேல்.

மந்திரி சபை அமைக்கும் விஷயத்தில் அபிப்பிராய பேதமில்லாத இடம் எதுவுமில்லை. அதிலும் பாடியாலாவில் மந்திரிசபை அமைக்கும் விஷயத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள்மக்களா அல்லது மஹாராஜாவா என்பதுதான் பிரச்னை.

மேலும் ஸர்தார் பட்டேல் இந்தியாவில் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சி இருப்பினும் மதங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் ஆனல் மதத்தின் பெயரால் அரசியலில் தலையிட யாருக்கும் இடமளிக்கப்படமாட்டாதென்றும் கூறினர். ஒவ்வொரு உண்மை இந்தியனும் ஸர்தார் பட்டேல் கூறியதை வரவேற்பான் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் இன்று பாடியாலாவில் நடப்பதென்ன! ராஜபிரமுகரும் ஸ்டேட்மினிஸ்ட்ரி மத அடிப்படையற்ற கொள்கையை மீறுகின்றனர். கலப்பட மற்ற வகுப்புவாதக் கட்சி (அகாலிகட்சி) யுடன் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவ அடிப்படையில் மந்திரி சபை அமைக்க சமரஸப்பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது. சர்க்கார் கொள்கையிலுள்ள முரண்பாட்டை புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த முரண்பாட்டை நீக்க சர்க்கார் முயற்சிக்குமென்றும் கிழக்கு பாஞ்சால மக்களின் வகுப்புவாதமற்ற உண்மையான பிரதிநிதிகளைக்கொண்டு மந்திரிசபை அமைக்குமென்றும் நம்பலாம்.

[முன் பக்கத் தொடர்ச்சி.]

கலாம். உண்மையில் தேசத்துரோகிகளென்று நிரூபிக்கப்பட்டால் துரோகிகளுக்கு உரியதண்டனையைக் கொடுக்கலாம் தேசத் துரோகிகளுக்கு சரியான தண்டனை துப்பாக்கி முனை அல்லது தூக்குமேடை தான்.

போலீஸ் சேவகர்களின் சந்தேகத்தை இறுதித் தீர்ப்பாகக்கொள்வது சரியல்ல அத்துடன் கண்டபடி கைது செய்யும் தீவிர நடவடிக்கைகளை விட்டு ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளும்படி போலீஸ் சேவகர்களுக்கு யோஜனை கூறப்படவேண்டியதும் அவசியம். திறமையைக் காட்ட அவர்களுக்கு எத்தனையோ இதர குறைகள் இருக்கின்றன. நாட்டில் அதிவேகத்துடன் பரவி வரும் அபாயகாமான கிருமிகள் விஷயத்தில் போலீஸார் கவனம் செலுத்தினல் வேறு பக்கம் திரும்பிப் பார்க்கவும் அவர்களுக்கு அவகாசம் இருக்க முடியாது.

காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு இந்தியப் பிரதமர் பேட்டி.

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால்நேரு சென்னையில் 26—7—48 திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு காங்கிரஸ் முஸ்லிம்களின் தூதுகோஷ்டிக்கு பேட்டியளித்தார். ஜனாப்கள் A.M. அல்லாபிச்சை, ஹாஜி M அப்துர் ரஹ்மான் சாஹிப், அப்துல் ரஹ்மான்பேக் சாஹிப், ரவூப்பாக்ஷா சாஹிப் O S. மரைக்காயர், சையத் ஜலாலுத்தீன் சாஹிப், மௌலானா மக்பூல் அஹ்மத் சாஹிப, மௌலானா அப்துல் ஹக்கீம் சாஹிப் ('ஆஸாத்' ஆசிரியர்) தூது கோஷ்டியிலிருந்தனர். A.M. அல்லா பிச்சை தூதுகோஷ்டிக்குத் தலைமை வகித்தார்.

சரியாக மூன்றரை மணிக்கு இந்தியாவின் பிரதமர், சர்வ தேசீய அரசியல் சிரேஷ்டர், மக்களின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமான ஒப்பற்றத் தலைவர் பண்டித ஜவஹர்லால்நேரு இருந்த அறைக்குள் நாம் பிரவேசித்தோம். சாதாரணமான ஒரு நாற்காலியில் இந்தியாவின் பிரதம மந்திரி வீற்றிருந்தார். அவருக்கு முன்னால் போய் உட்கார்ந்த வுடன் பக்கத்திலிருந்த சிகரெட் பெட்டியைத்திறந்து சிரித்த முகத்துடன் நீட்டினார். தூதுகோஷ்டித் தலைவர், A. M. அல்லாபிச்சை ரம்ஸான் மாதத்தை நினைவூட்டியவுடன் "ஓ ஹோ! நான் மறந்தே விட்டேன் மன்னிக்கவும்" என்று விநயமாகக் கூறினார்.

புன்னகை தவழும் பால் போன்ற அவருடைய முகத்தை கள்ளங்கபடமற்ற அவருடைய உள்ளத்தை பிரதிபலித்துக்கொண்டிருந்த வெண்மையான அவரது கதராடை ஆயிரம் மடங்கு அதிகமாய் தூய்மையாக்கிக்கொண்டிருந்தது.

ஒரு பக்கம் அவரது கம்பீரம்! இன்னொரு பக்கம் தாயைக் கண்ட சேய்களைப்போல் தூதுகோஷ்டியினருக்கு ஏற்பட்ட எக்களிப்பு. இரண்டுமாகச் சேர்ந்து தாங்கள் சொல்லவேண்டியவைகளை எடுத்துச்சொல்லும் பக்குவமான தன்மையை தூது கோஷ்டியினரிடமிருந்து பறித்துக்கொண்டது. ஆயினும் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு பூரிப்படையும் தாயைப்போல் சிரித்த முகத்துடன் பண்டித நேரு பொறுமையுடன் கேட்டார்.

எத்தனையோ அலுவல்களின் நடுவே தன்னுடைய மேலான நேரத்தை நமக்குப் பேட்டியளிக்க ஒதுக்கிக் கொடுத்திருக்கையில் அதை பிரயோஜனப் படுத்திக் கொண்டு உலக முன்னணித் தலைவரின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளை கிரகிப்பதை விட்டு பேசிப் பேசி சலித்துப்போன விஷயங்களை பேசி அரிய சந்தர்ப்பத்தை இழப்பது எனக்கே பிடிக்கவில்லை. ஆயினும் பொறுப்பற்ற ஒன்றிரண்டு பேர்கள் துரதிர்ஷ்ட வசமாக தூது கோஷ்டியில் கலந்துகொள்வதில் வெற்றிபெற்று விட்டனர். இந்திய பிரதமர் வெகு பொருமையுடன் எல்லாவற்றையும் கேட்டார். முடிவில் கீழ்வருமாறு பதிலளித்தார்.

"இந்தியா பிரிக்கப்பட்டாய் விட்டது அதற்கு முன்பும் பிறகும் நடந்த சம்பவங்கள் இந்தியாவில் ஓர் நிலைமையை உண்டாக்கி விட்டன. தைரியமாக நடந்தவைகளை உதறித்தள்ளிவிட்டு தேசத்தின் அமைதியைக் காக்க ஒவ்வொருவரும் சலியாமல் உழைத்தால் வெகு சீக்கிரத்தில் இந்த நிலைமையை மாற்றிவிட முடியும்"

அவரைப் பார்த்த பிறகு அவரிடம் ஏதாவது சொல்லவேண்டும் அல்லது கேட்கவேண்டும் என்ற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. காங்கிரஸ் மேடைகளில் அன்று காட்சியளித்த அதே பண்டித ஜவஹராகத்தான் அவர் இன்றைக்கும் காட்சியளிக்கிறார். மக்களின் உள்ளங்களில் இடம்பெற்ற வீரஜவஹர் இன்று இந்தியாவின் பிரதம மந்திரியாக இருக்கிறார். தன்னுடைய மக்களுடன் கலந்து உறவாடும் அதேரீதி இன்றைக்கும் அவரிடம் இருக்கின்றது என்று நினைக்கும்போது ஏற்படும் உள்ளக்களிப்பு ஒன்றே எனக்குப் போதுமானதாக இருந்தது.

"மௌலானா அபுல்கலாம் ஆஸாதை சில தினங்களுக்காக இங்கு வரும்படி தாங்கள் செய்ய வேண்டும்" என்று ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாஹிப் கேட்டுக்கொண்டார். அதைக்கேட்டவுடன் பண்டித நேரு சிரித்துக்கொண்டே "இது என்னால் சாத்தியமில்லை. வேண்டுமானால் உங்களுடைய அழைப்பை மௌலானாவிடம் நான் சமர்ப்பித்து விடுகிறேன். என்னால் முடியக்கூடிய வேலை அவ்வளவுதான்" என்று பதிலளித்தார்.

நாங்கள் உள்ளேபிரவேசித்தபோது பண்டிதநேரு எழுந்து எதிர்நோக்கி வந்து எல்லோருடனும் கைகுலுக்கி அழைத்துச்சென்று உட்காரவைத்தார். விடைபெற்றுக்கொள்ளும்போது எழுந்து எல்லோருடனும் கைகுலுக்கி வழியனுப்பினார்.

பண்டித ஜவஹர்லால் நேரு வாழ்க!

—ஆசிரியர்.

பட்டாணிஸ்தானும் ஆங்கிலேயர்களும்

பட்டாணிஸ்தான் கிளர்ச்சிக்கு எதிராக பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவ்வப்போது எழுதிவருவதிலிருந்தே பாகிஸ்தான் உள்நாட்டு விஷயங்களில் ஆங்கிலேயர்களுக்கு இருந்து வரும் அக்கரையின் அளவைத் தெரிந்து கொள்ளலாம்.

எல்லைப்புரத்தில் கான் அப்துல் கபர்கான் கட்சியை ஒடுக்குவதற்கான பாகிஸ்தானால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் குரலெனக் கருதப்படும் "டைம்ஸ்" பத்திரிகை பாராட்டிப் புகழ்ந்து எழுதியிருக்கிறது.

இப்பி பக்கிரிக்கு எதிராக பாகிஸ்தான் எடுத்த ராணுவ நடவடிக்கைகளை குறிப்பிட்டு விட்டு பட்டாணிஸ்தான் கிளர்ச்சியை மட்டந்தட்ட பலமான நடவடிக்கைகள் எடுக்கும்படி பாகிஸ்தான் சர்க்காருக்கு தூபம் போட்டிருப்பதுடன் பட்டாணிஸ்தான் அமைவதால் பாகிஸ்தானுக்கே பெருந்தீங்கு ஏற்படுமென்றும் அதன் எல்லைகள் பலஹீனமடைந்து விடுமென்றும் "டைம்ஸ்" எச்சரித்திருக்கிறது.

பாகிஸ்தான் எடுத்திருக்கும் கடுமையான நடவடிக்கைகள் நீடித்தால் ஆப்கனிஸ்தானமும் பணிந்து விடுமென்றும் அதனால் பட்டாணிஸ்தானுக்கு காபூலில் இருந்து வரும் ஆதரவு நாளாவட்டத்தில் மறைந்து விடுமென்றும் "டைம்ஸ்" மேலும் பாகிஸ்தான் சர்க்காருக்கு உற்சாக மூட்டுகிறது.

முஸ்லிம்களின் மஹத்தான எதிர்காலத்தைப் பார்க்க ஆங்கிலேயர்களுக்கு எவ்வளவு ஆசை! பாகிஸ்தான் வெற்றியில் என்ன அக்கரை! அதற்கு ஆங்கிலேயர்களின் கடந்த கால சரித்திரம் ஒன்றே போதாதா! பழைய சரித்திரத்தைப் பிரட்டிப் பார்க்க பாகிஸ்தானிகளுக்கு அவகாசமில்லாவிடினும் இன்றைய பாலஸ்தீன் நிகழ்ச்சிகளைக்கூடவா பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்வார்கள்? இருந்தாலுமென்ன? செல்வாக்குள்ள பிரிட்டிஷ் பத்திரிகையின் யோசனையை அலட்சியம் செய்யலாமா? எல்லைப்புரக் கிளர்ச்சிகளை மட்டந்தட்டும் பெயரால் மலைஜாதி முஸ்லிம்களின் தலைகளின் மேல் ஆகாயத்திலிருந்து குண்டுகளைப் போட்டு அவர்களை அழித்து நாசமாக்கி அதம் செய்யாமல் விடுவது பாகிஸ்தானின் துரதிர்ஷ்டமில்லையா!

"டைம்ஸ்" போன்ற வெள்ளை நண்பர்களின் ஆலோசனையை ஏற்கத்தான் வேண்டும்! தவிர தன்னைத் தோற்றுவித்த ஜன்ம தாதாக்களான வெள்ளையர்களின் இஷ்டப்படி ஆடுவதற்காகத்தானே பாகிஸ்தான் பிறந்திருக்கிறது! முஸ்லிம்கள் இருந்தாலென்ன! அழிந்தாலென்ன! வெள்ளையர்கள் திருப்தியடைந்தால் அது ஒன்றே போதுமல்லவா!

'ரம்ஸான்' பண்டிகையை முன்னிட்டு நமது அடுத்த (9—8—48) இதழ் நிறுத்தப்பட்டிருக்கிறது. (16—8—48) இதழ் 'ஆஸாத்' சுதந்திர மலராக வெளிவரும்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

தேச ஊழியர்
சஷ்டி அப்தபூர்த்தி விழா.

நமஸ்காரம்.

அயராத உழைப்பாளி, அம்மாபேட்டை ஸ்ரீ P. வெங்கட்டராமய்யர் M. L. A. அவர்கள் 30-வருஷங்களுக்கு மேலாக தேச சேவையில் ஈடுபட்டு, தன்சொந்தவேலைகளை கவனியாமல், பொது ஜனத் தொண்டிலேயே தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் சிலவுசெய்து வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அன்னாருடைய (சஷ்டி அப்தபூர்த்தி) 60-ம் ஆண்டு நிறைவு நாள், வருகின்ற ஆகஸ்டு 31உ வருகின்றது. அந்த நாளை ஒரு விழாவாக கொண்டாடி அன்னாரின் சேவையைப் பாராட்டி, ஒரு பரிசு அளிக்க வேண்டுமென்று பலர் அபிப்பிராயப்படுவதால், அதற்கென ஒரு கமிட்டி ஏற்படுத்த நாளது 8-8-48உ மாலை 6-மணிக்கு கும்பகோணம், "ஷரீப் மஹாலில்" ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அந்த கூட்டத்திற்கு எல்லோரும் வரும்படியும், தங்களால் இயன்ற உதவி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தங்கள்,

கும்பகோணம், 25—7—48.

K. M. ஷரீப்.
டாக்டர், R. மகாலிங்கம்,

'ஆஸாத்' பணத்தை வைத்துக் கொண்டு கொடுக்காமலிருப்பவர்களின் பெயர் இதனடியில் வெளியிடப்படுகிறது.

M. அப்துல்சலாம்,
ஈரோடு.

— மூன்ருவது உலக யுத்த அரங்கம். —

"பெர்லின்" ஜெர்மனியின் சரித்திரப் பிரசித்திப்பெற்ற தலைநகரான பெர்லின்........இன்று மீண்டுமொரு முறை உலகயுத்த அபாயத்தின் நடுவே தலை தூக்குகின்றது. நேற்றுவரை நேச நாட்டினராய் அளவளாவிக்கொண்டிருந்தவர்களே இன்று பெர்லின் முச்சந்தியில் ஒருவரையொருவர் எதிர்த்து அணி வகுப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். ஹிட்லருடைய தலைநகரை ஆக்ரமிப்பதில் நேச நாட்டினர் அடைந்த வெற்றியை தோல்வியாக மாற்றி நேச நாட்டினர் மீது வெற்றி கொள்வதில் ஹிட்லரின் பெர்லின் முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்காவின் யுத்த சூரரான ரூஸ்வெல்ட் துரை கிடைத்த வெற்றிகளின் வேதனையால் மாண்டார். பிரிட்டனின் யுத்த வெறியரான வின்ஸ்டன் சர்ச்சில்தரையோ சமூகத்தினராலேயே பதவியிருந்து நீக்கப்பட்டு சீண்டுவாரற்றுப்போனர். ஹிட்லரைப் பற்றித் திண்ணமாய் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. புண்ணியவான் இருக்கிருரா அல்லது தொலைந்தாரா என்பதுகூட நிச்சயமாகத்தெரியாது. ஆயினும் அவருடைய ஆத்ம சக்தி அழியாமலிருப்பதும் பெர்லினில் தன்னுடைய வேலை செய்து கொண்டுமிருப்பதென்னமோ நிச்சயம்.

பெரிய நேச நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா மூன்றும் இன்று உலக விதியின் எஜமானர்களாக விளங்குகின்றன மூன்று தேசங்களின் பிரதிநிதிகளும் தெஹ்ரான், யால்டா, போட்ஸ்டம் நகரங்களில் கூடினர். பிரச்னைகளை விவாதித்து முடிவு செய்தனர். தங்களுடைய பரஸ்பர வேற்றுமையின்கோயிலில் ஒற்றுமையின் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தனர். தாங்கள் சரியான நேசதேசத்தினரென்றும் உலக விவகாரங்களில் ஒத்துழைக்கப்போவதாகவும் உலகுக்கு உறுதியும் அளித்தனர் பிறகு தங்களுடைய சகாக்களையெல்லாம் ஸான் பிரான்ஸிஸ்கோ அரசியல் விழாவில் ஒன்று திரட்டி "உலக சமாதானமும் ஒற்றுமையுமே நம் லட்சியம். இரண்டு யுத்தங்களால் உலகம் நசித்து விட்டது. இனி மூன்ருவது யுத்தம் அசாத்தியம். பல்வேறு நாடுகளிடையே பிணக்குகள் தவிர்க்க முடியாதாயினும் அவைகள் யுத்தத்தின் மூலமல்லாது மத்தியஸ்தத்தின் மூலமும் நேச நாட்டு நீதி மன்றத்தின் மூலமும் தீர்க்கப்படும்" என்று பிரகடனம் செய்தன.

நேச நாட்டினரின் மூன்று பெரிய நாட்டாண்மைக்காரர்களே இன்று பெர்லின் விஷயத்தில் சச்சரவிட்டுக்கொண்டு பெர்லினில் உட்கார்ந்து கொண்டே யுத்த திட்டங்களை தயாரித்துக்கொண்டிருப்பது வருந்தத்தக்க விஷயமல்லவா? அதுதான் ஹிட்லரின் ஆத்ம சக்தியின் வேலை!

1945 ல் ஜெர்மனியை ஜெயித்தநேச தேசத்தினர் ஜெர்மனியை நான்கு இடங்களில் ஆபரேஷன் செய்தார்கள். ஜெர்மனியின் ஆபரேஷனுக்குப் பிறகு பெர்லின் ஆபரேஷன் தவிர்க்க முடியாததாகிவிட்டது. நேற்றுவரை பெர்லினை ஆபரேஷன் செய்வதில் தீவிரமாய் முனைந்திருந்த நேசதேசத்தினரின் உடலை இன்று பெர்லின் ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறது. இரண்டு பட்டாக்கத்திகள் ஒரு உறையினும் இரண்டு அரசர்கள் ஒரு ஆட்சியிலும் இருக்கமுடியாதென்பது பழமொழி. ஜெர்மனியில் மட்டும் மூன்று வல்லசுகளும் போதாக் குறைக்கு நான்காவதாக பிரான்ஸும் சேர்ந்து ஒரு ஆட்சியின் எல்லைகளுக்குள் எப்படி சௌஜன்யமாய் இருக்கமுடியும்?

பெர்லின் பிரச்னையையும் நேச தேசத்தினரிடையே எழுந்துள்ள தகராறையும் சரிவர தெரிந்து கொள்வதற்கு ஜெர்மன் வீழ்ச்சிக்கு முந்திய சமீப நாட்களில் நடந்ததை அலசிப்பார்க்க வேண்டிய தவசியம்.

நேச நாடுகளுக்கு வெற்றி நிச்சயமென்று உணர்ந்தவுடன் ஹிட்லர் ஒரு அரசியல் தந்திரத்தை கையாடினன் பிரிட்டிஷ் அமெரிக்க படைகளுக்கு முன் பெர்லினை அடைந்து ஆக்ரமிப்பதற்கு ரஷ்யப் படைகளுக்கு சந்தர்ப்பமளித்து விட்டான். ரஷ்யப் படைகள் பெர்லின் அடைந்த பிறகு பிரிட்டிஷ் அமெரிக்க படைகளுக்கு முன்னல் இருந்து வந்த தடைகள் அகற்றப்பட்டன. இவ்விதம் ஜெர்மனியை கிழக்கு, மேற்கு சக்திகளிடையே பிரிவினை செய்தாயிற்று.

ஜெர்மனியின் பிரிவினை பிற்காலத்தில் நேசதேசத்தினரை இரண்டாகப்பிரித்து விடுமென்பது ஹிட்லரின் நம்பிக்கை. ஜெர்மன் பிரிவினையின் பயனாக இரண்டு யுத்த கோஷ்டிகள் தோன்றுமென்றும் அவ்விரண்டு கோஷ்டிகளிடையே யுத்தம் மூளுமென்றும் அதைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு ஜெர்மன் மக்கள் மீண்டும் புத்துயிர் பெற்று பலமடைய முடியுமென்றும் ஹிட்லர் நம்பினன். இன்று ஹிட்லரின் அரசியல் தந்திரம் வெற்றியடைந்திருக்கிறது. மூன்றே வருஷங்களுக்குள் நேசதேசத்தினர் பரஸ்பர பலப்பரீட்சையில் இறங்கியிருக்கின்றனர். நேசதேசத்

தினரின் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே பெர்லின் அரங்கத்தில் அபிப்பிராய பேதம் வளர வளர இருதரப்பிலும் ஜெர்மன் விஞ்ஞானிகள், ஜெர்மன் அரசியல் வாதிகள், ஜெர்மன் ராணுவ ஆபீஸர்கள், ஜெர்மன் மக்களின் முக்கியத்துவம் வளர்ந்து கொண்டிருக்கிறது ஹிட்லரின் ஜீவனற்ற சமூகம் புத்துயிர் பெற்று வருகின்றது நேசநாட்டினரின் பரஸ்பர சச்சரவை இருதரப்பிலுள்ள நாஜி வாலிபர்கள் பிரயோஜனப் படுத்திக்கொள்வதற்கு முன்வருகின்றனர். அவர்களுடைய வரண்ட நரம்புகளில் புதிய வாழ்க்கையின் நம்பிக்கைகள் ரத்தம்போல் ஓட ஆரம்பித்திருக்கின்றன.

பெர்லின் தகராறு என்ன? இந்த கேள்விக்குப் புதில் போட்ஸ்டம் ஒப்பந்தத்தில் அடங்கியிருக்கின்றது. இந்த ஒப்பந்தம் 1945 ஆகஸ்டில் ஏற்பட்டது அதன் மூலம் ஜெர்மனியை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளிடையே பிரித்து பிரிவினைக்குப்பிறகும் ஜெர்மனி ஐக்கியமாகவே இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது பரஸ்பர புகார்களை தீர்ப்பதற்காக அன்னியநாட்டு மந்திரிகள் அடங்கிய கவுன்ஸிலும் பிரிக்கப்பட்ட ஜெர்மனியின் நான்கு நேசதேச சேனாதிபதிகளை மெம்பர்களாகக் கொண்ட ஒரு ஆதிக்க கவுன்ஸிலும் ஏற்படுத்தப்பட்டன. ஜெர்மனியிலிருந்து நாஜிஸத்தை ஒழிப்பதற்காக கீழ்வரும் இரண்டு கொள்கைகளும் நிர்ணயிக்கப்பட்டன.

1. ஜெர்மனியில் பிரதேச ஜனநாயக ஆட்சி அமைக்கப்பட வேண்டும்

2. ஜெர்மனி பூராவும் ஒரே ஐக்கிய பொருளாதார மண்டலமாக பாவிக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய இரண்டு கொள்கைகளே இன்றைய சச்சரவுக்கு காரணமாக அமைந்து விட்டன. மேற்கத்திய நேசநாடுகளால் போட்ஸ்டம் ஒப்பந்தம் மீறப்படுகிறது என்பதே ரஷ்யாவின் நீண்டகால குற்றச்சாட்டு.

"போட்ஸ்டம் ஒப்பந்த விதிகளை அனுசரிப்பதில் ரஷ்யா தோல்வியே அடைந்திருக்கிறது" என்று ஜுலை முதல் தேதி பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி மிஸ்டர் பெவினும் ரஷ்யாமீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஜெர்மனி பூராவிலும் ஐக்கிய ஜெர்மன் ஆட்சி ஏற்படவேண்டுமென்று ரஷ்யா கோருகிறது. அதன் மூலம் பாதிக்கப்பட்ட ஜெர்மன் விவசாயிகள் தொழிலாளர்களை கம்யூனிஸ்ட் வலையில் போட்டுக் கொண்டு பூரா ஜெர்மனியையும் வெகு சுலபமாக கபளீகரம் செய்துவிட முடியுமென்று ரஷ்யா நம்புவதாகத் தெரிகிறது. தன்னுடைய ஐக்கிய ஜெர்மன் ஆட்சி கோரிக்கையை பிரிட்டனும், அமெரிக்காவும் ஏற்க மறுத்தவுடன் "ஜெர்மனி பூராவும் ஒரே ஐக்கிய பொருளாதார மண்டலமாகப் பாவிக்கவேண்டும்" என்ற போட்ஸ்டம் கொள்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது.

அதன் பலனாக ரஷ்ய பங்கு ஜெர்மனியின் நாணயம், மார்க்கெட், உற்பத்தியின் நிலைமை பிரிட்டிஷ் அமெரிக்க பங்கு ஜெர்மனியின் நிலைமைக்கு முற்றிலும் மாறுதல் அடைந்து விட்டது. அதனால் அதிகமாக பாதிக்கப்பட்டது பெர்லின் நகரம். மேற்கு பெர்லினின் நாணயத்தின் மதிப்புக்குறைய ஆரம்பித்ததைக் கண்ட பிரிட்டனும் அமெரிக்காவும் உடனே புதிய நிர்ணய முறையையும் சீர்திருத்தங்களையும் வெளியிட்டனர். அப்படிச் செய்யாமலிருந்திருந்தால் அப்பிரதேசத்திலுள்ள பட்டினி ஜெர்மனியர்கள் வெகு சுலபமாக கம்யூனிஸ்ட் வலையில் சிக்கியிருப்பார். பிறகு யுத்தம் ஏற்படுகையில் ஜெர்மனியர்களின் உதவி பெற்று ரஷ்ய படைகள் ஜெர்மனி பூராவையும் ஆக்ரமித்துக் கொண்டிருக்க முடியும். பிரிட்டன் அமெரிக்காவின் புதிய நாணய முறையால் ரஷ்ய உத்தேசங்களை பூர்த்தியாகவிடவில்லை எனவே ரஷ்யா பெர்லினை பொருளாதார முற்றுகைக் குள்ளாக்கிவிட்டது.

பெர்லின் நகரம் ரஷ்ய பங்கு ஜெர்மனியின் நடுவே இருக்கின்றது. பொருளாதார முற்றுகையால் பிரிட்டன் அமெரிக்க பங்கு பெர்லின் பிரதேசத்தில் வசிக்கும் இருபத்திரண்டு லட்சம் மக்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காக திண்டாட வேண்டிய நிலைமைக் குள்ளாகி விட்டனர். மேற்கு பெர்லினிலுள்ள இருபத்திரண்டு லட்சம் மக்களின் வாழ்க்கைத் தேவைகளை ஆகாய விமானங்கள் மூலம் கொண்டு போய் சேர்ப்பிக்கும் வேலை ஆரம்பமாயிற்று. கூடவே ரஷ்யா ஆகாய விமான ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்து ஆகாய மார்க்கத்தையும் அபாயத்துக்குள்ளாக்கியிருக்கிறது. பிரிட்டன் அமெரிக்க கண்டனங்கள் எவ்வித பலனுமளிக்க வில்லை. ஒருபக்கம் பலப்பரீட்சை நடக்கிறது. இன்னொருபுரம் இருதரப்பாரும் ராணுவ அணிவகுப்பில் முனைந்திருக்கின்றனர்.

மூன்றாவது யுத்த சந்தர்ப்பத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள கொக்கைப் போல் ஹிட்லரின் சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

—: மாகாண :—

ஐக்கிய முன்னேற்றக் கமிட்டிக் கூட்டம்.

—(o)—

இன்றைய நிலைமை, லீக் பிரசார விளைவு — (அல்லா பிச்சை)
முஸ்லிம்களுக்கு தனி ஸ்தாபனம் தேவை யில்லை — (A. K. பிஜ்லி)
இஸ்மாயிலை ஜின்னா கெடுத்துவிட்டார் — (M. ஜமால் முஹம்மது)
கம்யூனிஸம் ஒரு மதம் - கட்சியல்ல - கிளர்ச்சியுமல்ல — (மௌலானா மக்பூல் அஹ்மது)

சென்னை ஜார்ஜ் டவுன் ரஹ்மான் மன்ஸில் கட்டடத்தில் 23—7—48 மாலை நடந்த சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அங்கத்தினர்களின் கூட்டத்திற்கு ஜனாப் ஹாஜி M. அப்துல் ரஹ்மான் சாஹிப் தலைமை வகித்தார். பத்தொன்பது அங்கத்தினர்களைக் கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவை சென்னைக்கு வர வேண்டும், இந்தியாவுடன் சேரும்படி ஹைதராபாத் நிஜாமைக் கேட்டுக்கொண்டும், முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்க்க காங்கிரஸ் கமிட்டிகள் முயற்சிக்க வேண்டியது அவசியமென்றும், தாய்நாட்டுச் சேவையின் வீரமரணமெய்திய வீரன் பிரிகேடியர் உஸ்மானை பாராட்டியும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் உழைத்துவரும் 'ஆஸாத்' வாரப்பத்திரிகைக்கு உதவும்படி வேண்டிக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அங்கத்தினர்கள் பேசியதாவது:—

ஜனாப் A M அல்லாபிச்சை சாஹிப்:— முஸ்லிம்கள் என்றுமே ஒன்றுபட்டு இந்தியாவின் விடுதலைக்காக போராடி வந்திருக்கின்றனர். அவர்கள் வெள்ளையர்களுடன் ஒத்துழைப்பதே இல்லை. அதற்கு மாறாக வெள்ளையர்களுடன் ஒத்துழைப்பதை பாபமென்றே நினைத்தனர். 1857ல் பிரிட்டிஷாரை எதிர்த்து கிளர்ச்சி செய்து இந்தியாவுக்காக சொல்லொணாத் துயரங்களை முஸ்லிம்கள் அனுபவித்திருக்கின்றனர். 1906-வரை முஸ்லிம்கள் மேற்கொண்டிருந்த நிலை இதுதான். 1906ல் வெள்ளையர்களின் தூண்டுகோலால் முஸ்லிம் லீக் அமைந்தது. அதனுடைய வேற்றுமைப் பிரசாரத்தின் விளைவே இன்றைய நிலைமை. ஒத்துழையாமை போராட்டத்தின் போதும் முஸ்லிம்கள் தங்கள் ஹிந்து சகோதரர்களுடன் தோளோடு தோள் நின்று வெள்ளையர்களை எதிர்த்திருக்கின்றனர். ஆகஸ்ட் 15-க்குமுன் முஸ்லிமல்லாத சகோதரர்களுடன் லீகர்கள் அனுசரித்த அதே போக்கை இன்று இந்திய யூனியன் முஸ்லிம்களுடன் நம் முஸ்லிமல்லாத சகோதரர்கள் அனுசரிப்பதைப் பார்க்க என் மனம் வேதனையடைகின்றது. இந்தியாவின் சுபிட்சத்துக்கும் உயர்வுக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மிகவும் அவசியம். முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்ப்பதில் வெற்றி பெற நம்மால் சாத்தியமான எல்லா முயற்சிகளையும் நாம் செய்தாக வேண்டும் அதுதான் இன்றைய நிலைமைக்குப் பரிகாரம். இரண்டு சமூகங்களுக்கு இடையே இதற்குமுன் இருந்து வந்த சௌஜன்யத்தை மீண்டும் ஏற்படுத்தி இந்தியாவை முன்னேற்றுவோமாக.

ஜனாப் A. K பிஜ்லி சாஹிப் :— இதுவரை முஸ்லிம்களிடையே நடந்த பிரசாரம் எல்லாம் மத அடிப்படையிலே தான் நடந்திருக்கிறது அதனால் அக்காலத்தில் முஸ்லிம்களுள் ஒருவித தேசபக்தி உண்டாயிற்று அது கிலாபத் என்ற மத அடிப்படையில் தான் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. இதை பல தடவைகளில் காலஞ்சென்ற சீனிவாச அய்யங்கார் என்னிடம் சொல்லியிருக்கிறார் அந்த அடிப்படையை வைத்துக்கொண்டே மத வேஷதாரிகளும் அவர்களை இந்த நிலைமைக்கு இழுப்பது சாத்தியமாயிற்று ஆகையால் இனி நீங்கள் பிரசாரத்தில் எவ்வித மதக்கொள்கையையும் புகுத்தாமல் தேசீயத்தின் பேரால் பாடுபட வேண்டும். முஸ்லிம்களுக்குத் தனி ஸ்தாபனமோ தனிப்பட்ட இயக்கமோ கூடாதென்பது என்னுடைய முடிவு. மதம் அவர்களுடைய அனுஷ்டானத்தில் இருக்கட்டும். ஒன்றுபட்டு காங்கிரஸுடன் வேலை செய்வோமாக.

ஜனாப் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் :— இன்று இந்திய முஸ்லிம்களிடையே மாறுதல் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமே. கஷ்ட நஷ்டங்களுக்கு இலக்கான வட இந்திய முஸ்லிம்களிடையே மாறுதல் அதிகமாய் ஏற்பட்டிருக்கிறது இங்கு நாம் பிரசாரத்தின் மூலம் அவர்களை மாற்றலாம். முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்ப்பதற்காக பிரசாரத்தை துடங்கி ஆங்காங்கு ஐக்கிய முன்னேற்றக் கமிட்டிகளை அமைத்து வேலையை ஆரம்பிக்கவேண்டும்.

ஜனாப் அப்துல் லதீப் சாஹிப் :— மத்திய, மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுடன் நாம் இன்னும்

அதிகமான தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் அவைகளின் உதவியுடன் பிரசாரம் செய்யப்படவேண்டும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேற்பார்வையில் வேலை செய்யவேண்டிய தவசியம்.

ஹாஜி M. ஜமால் முஹம்மது சாஹிப் :— வகுப்புவாத ஸ்தாபனங்களுக்கு இனி அரசியல் அரங்கத்தில் வேலையில்லை. முஸ்லிம்களனைவரும் காங்கிரஸில் சேரவேண்டுமென்ற அடிப்படையில். ஐக்கிய முன்னேற்றக்கமிட்டி வேலையை துடங்கவேண்டும். அதனுடைய அமைப்பும் நாட்டுக்கு ஏற்ற முறையில் இருக்கவேண்டியதவசியம் இன்றைய நிலைமையில் இதே அடிப்படையில் தான் சமூகத்தையும் தேசத்தையும் முன்னேறச் செய்ய முடியும் என்பது திண்ணம். நாம் இன்று அடைந்திருக்கும் நிலைமைக்கு சர்வ தேசீய அரசியல் அறிவு இல்லாததே காரணம் நம்முடைய பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேரு உலசத்தில் தலை சிறந்த சர்வ தேசீய அரசியல் அறிவுடையவர் என்பது நாம் பெருமையடையக் கூடிய விஷயம். சிலரைப்போல்தான் பெருமையடைவதற்கு எதிரியை தோற்கடிக்கும் நோக்கங் கொண்டவர் அவரல்ல. மஹாத்மா காந்தி விசாலமான அரசியல் ஞானியாக இருந்ததுடன் இஸ்லாமிய கல்வியிலும் தலை சிறந்தத் தலைவராக இருந்தார். சகல மதங்களிலும் உள்ள உண்மைகளை அடிப்படையாகக் கொண்டே அவர் தன்னுடைய எல்லா வேலைகளையும் செய்துவந்தார். நபி நாயகம் வகுப்பு வாதத்தை கண்டித்து வகுப்புவாத பிரசாரம் செய்கின்றவன் நம்மைச் சார்ந்தவனல்ல. வகுப்புவாதத்தில் சச்சரவு செய்கின்றவன் நம்மைச் சார்ந்தவனல்ல. வகுப்பு வாதத்தால் கொல்லப்பட்டவன் நம்மைச் சார்ந்தவனல்ல’ என்று வருணித்திருக்கிறார். இந்த அடிப்படையிலேயே மஹாத்மா தன் வேலையை நடத்தினார். ஆனால் மிஸ்டர் ஜின்னா தேசீய சகோதரர்களை விட்டு வெள்ளையர்களை நம்பி தன்னுடைய துவேஷ வேலையை செய்து முடித்தார் வெள்ளையர்களோ இங்கிருந்துப் போய் விட்டார்கள். அவர்களை நம்பி செய்யப்பட்ட பிரசாரத்தின் விளைவுதான் இன்றைய நிலைமை. இனி ஐக்கிய முன்னேற்றக் கமிட்டியின் லட்சியத்துக்காகத் தான் உழைக்கவேண்டும். அதனால் அமைதியின்மை நீங்கி தேசத்தில் சகோதரத்வம், சமத்துவம், சுபிட்சம்பரவ முடியும் ஆகையால் வகுப்புவாத முஸ்லிம் லீக்குக்கு இனி இங்கு வேலையில்லை. இஸ்மாயில் சாயபும் இதை ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் மிஸ்டர் ஜின்னா அவரை காராச்சிக்குக் கூப்பிட்டு அவருடைய காதில் எதையோ ஊதி, அவருடைய நாக்கில் சர்க்கரையைத் தடவிவிட்டார்.

ஜனாப் மக்பூல் அஹ்மத் சாஹிப்:— ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி ஒரு தாற்காலீக ஸ்தாபனமாகும். முஸ்லிம்களைக் காங்கிரஸில் சேர்த்து தேசத்தின் நிலைமையை மாற்றுவதுடன் அதன் வேலை முடிந்துவிடும். அதற்குத் தனி மெம்பர்ஷிப் கிடையாது எந்த சமூகத்தினரும் அதன் அங்கத்தினராக இருந்து வேலை செய்யலாம். லீக் பிரசாரத்தினால் ஏற்பட்டிருக்கும் விஷம் இறங்கிய உடனே, இந்த ஸ்தாபனமும் மறைந்துவிடும். ஏறக்குறைய இரண்டு வருஷத்தில் இந்த வேலையைச் செய்து முடிக்கலாம். காங்கிரஸ் சார்பில் நாம் முஸ்லிம்களைக் கூப்பிடவேண்டும். காங்கிரஸ்காரர்களோ காங்கிரஸ் கமிட்டிகளோ முஸ்லிம்களைக் கூப்பிட வேண்டுமென்று நாம் எதிர்பார்த்திருக்கக் கூடாது அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காங்கிரஸ்காரர்கள் என்ற முறையில் முஸ்லிம்களை நாமே காங்கிரஸில் சேர்க்க வேண்டும். சோஷியலிஸ்ட் கட்சியில் முஸ்லிம்கள் சேர்வதால் நம்முடைய லக்ஷியம் ஈடேற முடியாது. முஸ்லிம்கள் காங்கிரஸுக்கு எதிராக இருந்தனர். இன்றும் அதற்கு எதிரான மேடையிலேயே இருக்கின்றார்கள் என்ற பேச்சுக்குத்தான் அதனால் இடமேற்பட முடியும். தவிர நாம் விரும்பும் அமைதியான நிலைமையும் தேசத்தில் ஏற்படாது. கம்யூனிஸத்தையோ முஸ்லிம்கள் நினைத்தும் பார்ப்பதற்கில்லை பாகிஸ்தான் அனுதாபிகளை அன்னிய நாட்டுப் பித்தர்கள் என்று நினைக்கின்றோம். கம்யூனிஸத்துக்கு ரஷ்யாதான் தாய்நாடு. தவிர கம்யூனிஸம் ஒரு மதம். கொள்கையல்ல; இயக்கமல்ல. ஆகையால் முஸ்லிம்கள் தங்கள் மதத்தை விட்டு காரல் மார்க்ஸ் மதத்தை ஏற்க முடியாது. காங்கிரஸ்காரர்கள் கூப்பிடும் வரையில் காங்கிரஸில் சேர வேண்டாமென்று முஸ்லிம்களுக்கு மஹாத்மா சொன்ன யோஜனை வேறு. இன்றைய நிலைமை வேறு. மௌலானா ஆஸாத் இன்றைய நிலைமைக்குத்தக்கவாறு முஸ்லிம்கள் உடனடியாக காங்கிரஸில் சேரவேண்டும். இல்லையேல் அழிவைத் தவிர வேறு ஒன்றும் நடக்காது என்று சொல்லிவிட்டார். முஸ்லிம்கள் அதைப் பின்பற்றவேண்டும்.

தீர்மானங்கள்

1. மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான நம் தலைவர் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவை சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்களாகிய நாம் நம் மாநகருக்கு மனப்பூர்வமாய் வரவேற்கின்றோம்.

2. இந்திய டொமினியனில் சேர வேண்டுமென்பதே இந்திய முஸல்மான்களின் மனப்பூர்வமான ஆசையாகையால் உடனடியாக இந்திய யூனி

யனில் சேரும்படி ஹைதராபாத் நிஜாமையும் சமஸ்தான மக்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

3. விரிவான, பயனளிக்கத்தக்கமுறையில் பொது மக்களிடையே குறிப்பாக முஸ்லிம்களிடையே தீவிர பிரசாரம் செய்வதன் மூலம் ஏராளமான அங்கத்தினர்களைக் காங்கிரஸில் சேர்க்க மாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்கள் முயற்சிக்க வேண்டுமென்று இக்கூட்டம் தெரிவிக்கின்றது.

4. முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்க்கவும் இந்திய யூனியனிலுள்ள இதர பிற்போக்கு கட்சிகளில் சேருவதைத் தடுக்கவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி மாகாண காங்கிரஸ் கமிட்டிகள், சர்க்கார்களைக் கேட்டுக் கொள்வதுடன் முஸ்லிம்களைப் பொருத்த தங்கள் கொள்கையை மகாத்மா காந்தியின் உபதேசங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்குமாறு மாகாணசர்க்கார்களையும் காங்கிரஸ் கமிட்டிகளையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

5. காஷ்மீர் அரங்கத்தில் தாய் நாட்டுக்காக சேவை செய்த பிரிகேடியர் உஸ்மானினின் அரிய சேவைகளை பாராட்டுவதுடன் தாய் நாட்டுச் சேவையில் வீரமரணமெய்திய முதல் வீரனை முஸ்லிம் சோல்ஜரைக் குறித்து இக்கூட்டம் பெருமையடைகிறது

6. தாய்நாட்டுச் சேவைக்கும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் உழைத்துவரும் ஒரே முஸ்லிம் பத்திரிகையான 'ஆஸாத்' தமிழ் வாரப் பத்திரிகைக்கு சாத்தியமான எல்லாத் துறைகளிலும் உதவி செய்யும்படி மாகாண மக்களை மாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்களின் இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்:— 1 ஹாஜி M. ஜமால் முஹம்மது சாஹிப், 2 ஹாஜி M. அப்துல் ரஹ்மான் சாஹிப், 3 ஜனாப் A. M. அல்லா பிச்சை சாஹிப், 4 புரொபஸர் சையத் ரவூப் பாஷா சாஹிப், 5 மௌலானா ஹக்கீம் அப்துல் ஹக்கீம் சாஹிப், 6 ஜனாப் மௌலானா அப்துல் மஜீத் சாஹிப், 7 ஜனாப் முஹம்மது இஸ்மாயில் சாஹிப், 8 ஹாபீஸ் அஹமத் மீரான் சாஹிப், 9 ஜனாப் ஷவுகத் அலி சாஹிப், 10 ஜனாப் முஹம்மத் பிஜ்லி சாஹிப், 11 ஜனாப் ஹாஜி முஹம்மது மவுலானா சாஹிப், 12 ஜனாப் முஹம்மது இப்ராஹீம் சாஹிப், 13 ஜனாப் அப்துல் ரஹீம் பேக் சாஹிப், 14 ஸ்ரீ சுப்பையா முதலியார், 15 ஜனாப் M. A. லத்தீப் சாஹிப், 16 ஜனாப் அப்துல் காதிர் சாஹிப், 17 M முஹம்மது முஸ்தபா, 18 K. காமராஜ், 19 ஜனாப் O. S சதக் தம்பி மரைக்காயர். வந்தனோபசாரத்துக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

[காரைக்குடியில் மின்சாரரசாயன ஆராய்ச்சிக் கழகத் திறந்து அஸ்திவாரக்கல் நாட்ட 25—7—48ந் தேதி இந்தியாவின் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால்நேரு வந்தபோது காரைக்குடி நகரசபையின் சார்பில் நகர சபைத்தலைவர் ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் வாசித்தளித்த உபசாரப்பத்திரம்.]

வந்தேமாதரம்.

இந்தியாவின் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவுக்கு காரைக்குடி நகரசபையார் வாசித்தளித்த உபசாரப்பத்திரம்.

மனிதகுல மாணிக்கமே வருக!

இருபதாவது நூற்றாண்டின் முன்னேற்ற சக்திகள் ஓர் உருவமாகத் தோற்றமளிக்குமாயின் அது தங்கள் உருவமே. நாற்புறமும் அழிவுச்சக்திகள் வேலைசெய்துகொண்டிருக்கும் பொழுது அவற்றிடையே அஞ்சாது தலை நிமிர்ந்து ஆக்க வேலையிலீடுபட்டு வரும் உலகப் பெரியார்களில் தங்களுக்கு ஒப்பார் இல்லை.

பரத கண்டத்தில் உதித்த முனிவர்களின் கண்கள் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கும் பார்வையைத் தங்கள் கண்களில் காண்கின்றோம். ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வுக்காக தியாகத் தீயில் புடம் போட்டு ஒளிவிடும் தங்கள் பொன்மேனியை எங்கள் உள்ளம் வழிபடுகின்றது.

காந்தியடிகளைச் சரிவர உணர்ந்து உலகமுழுமைக்கும் சரியான அரசியல் திட்டம் வகுத்துக் கொடுக்கும் தங்களின் அறிவுப் பெருக்கம்போல் ஆயுளும் பெருகி, புயலில் திசைதப்பிய மனித சமுதாயக் கப்பலைக் கரை சேர்த்தருள்வீர்களாக!

உலக வாழ்த்துக்கிடையே இந்தியப் பிரதமராக விளங்கும் ஜவாஹர்லால் நேரு அவர்களே! உங்களுக்கு வணக்கம் !!

காரைக்குடி
25 ஜுலை 1948. } தலைவரும், அங்கத்தினர்களும், நகரசபை, காரைக்குடி.

ஜெய்ஹிந்த்!

இந்தோ முஸ்லிம் சமூகம்.

'இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியில் கலாநிலை' என்ற தம் புத்தகத்தில் திரு S. M. ஜாபர் இந்து முஸ்லிம்களிடை ஏற்பட்ட உறவைச் சுருக்கமாகக் கூறுகிறார்:

'இந்தியாவுக்கு வந்த முஸல்மான்கள் இந்தியாவைத் தமது சொந்த நாடாகக் கொண்டு தாங்களும் இந்தியரானார்கள் அவர்களால் இந்துக்களுடைய நாட்டில், என்றென்றும் பகைமையில் வாழ்வது முடியாதகாரியம. இருசாராருர்கூடி வாழ்ந்ததால் நெருங்கிய உறவுக்கும், ஒருவரை யொருவர் நன்கு அறிவதற்கும் வழியேற்பட்டது. நேசமுள்ள அயல் வீட்டார்களாக இவர்கள் வாழுவதற்கேற்ற பொது வழியைக்கண்டு பிடிக்கும்படி சந்தர்ப்பங்கள் இவர்களை நாளடைவில் நெருங்கின; பாரசீகம், சமஸ்கிருதம் என்ற ஊடுபாவுகளிலிருந்து புதிய மொழியை உருவாக்கினார்கள். இந்து முஸ்லிம்களுடைய பொதுக் கலாசார ஆறு தன்னுடைய பழைய படுகைகளை விடுத்து உருது என்னும் புதிய வாய்க்கால் வழியாகப் பாய ஆரம்பித்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட கலாசாரம் இந்து அல்லது முஸ்லிம் மயமானதல்ல. அது இரண்டின் மனமிசைந்த சேர்க்கையால் ஏற்பட்டதாகும முஸ்லிம் அரசர்களும் தலைவர்களும் இந்துக் கலைகளையும், இலக்கியங்களையும், அறிவு நூல்களையும் தத்துவத்தையும் ஆதரித்தார்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்களையும் சமயப் பாடசாலைகளையும் யாவரும் சாதிமத பேதமின்றிப் பயிலும் வண்ணம் திறந்து வைத்தார்கள். சாதுக்களும் முனிவர்களும் செய்தது போல இவர்களும் தங்களுக்குரிய துறைகளின் மூலமாக இந்து முஸ்லிம் உறவை ஏற்படுத்த முயன்றார்கள் இதன் பயனாக இருசமுகத்தாரிடையே நல்ல இணக்கம் நிலவியது. ஆகவே, இந்துக்கள் முஸ்லிம் ஆலயங்களில் தின் பண்டங்கள் அளித்தால், திருவுளத்தை அறிவதற்குக் குரானை உபயோகித்தால், துரதிருஷ்டங்களை விரட்டுவதற்குக் குரானை தம்மோடு வைத்துக் கொண்டால், முஸ்லிம்களுக்கு விருந்தளித்தால், முஸ்லிம்களும் இந்துக்களிடம் இவ்வாறு பரஸ்பரம் நடந்து கொண்டால் இதிலொன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை .... இந்திய முஸ்லிம்களிற் பெரும்பாலோர் இந்து பொது மக்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் சந்தேகமில்லாமல் பலவழிகளில் திருந்தினர்களென்றாலும் அவர்களுடைய சமூக நிலைமையும் கலாசாரமும் உடனே மாறிவிடவில்லை. தங்களுடைய மதத்தை அவர்கள் மாற்றிக் கொண்டார்கள் வாஸ்தவம்தான். ஆனால் தங்களுடைய பழைய பழக்கவழக்கங்கள், பொழுது போக்குகள், பயிற்சிகள் எல்லாவற்றையும் அப்படியே வைத்துக்கொண்டார்கள். மத மாற்றம் அவர்களுடைய சுற்றுப்புறங்களையும் சூழ்நிலைகளையும் மாற்றிவிடவில்லை. அவைகளோ முழுக்கமுழுக்க சமூகத் தீண்டாமை, சாதி வேற்றுமைகள் நிறைந்தனவாக இருந்தன. இதன்விளைவாக இந்து சமூகத்தின் அம்சங்களைக்கொண்ட இந்தோ-முஸ்லிம் சமூகம் ஏற்பட்டது.'

கலர்சாரம் என்பது சிக்கலான விஷயம். ஒரு சமுதாயத்தின் அம்சங்களை விளக்குவது கடினமானது போல கலாசாரத்தின் அம்சங்களை விளக்குவதும்கடினமானதாகும். ஆனால் ஒரு கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்தவன் வேறொன்றிலிருந்து அதைப்பிரித்துக் காணத் தவறமாட்டான். ஒரே கலாசாரப்பிரிவு அல்லது கூட்டத்திலும் அநேக உட்பிரிவுகளிருக்கக் கூடும்.

வேறுபட்ட அல்லது ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான சமூக சமய சக்திகள் ஒன்று பட்டதாலேற்பட்ட கலாசாரத்தில் அத்தகைய உட்பிரிவுகளும் கூட்டங்களும் இல்லாமலிரா. அதனால் இந்தச் சகல உட்பிரிவுகள், கூட்டங்களுக்கெல்லாம் சேர்த்து மொத்தமாக ஒரு பொதுக் கலாசாரம் இருப்பது ஒழிந்துவிடாது. ஒரு கலாசாரத்தோடு இன்னொரு கலாசாரத்தை ஒப்பிட்டு பார்க்கும் சரியான முறை என்னவென்றால், ஒரு கூட்டம் அல்லது பிரிவின் மொத்தக் கலாசாரத்தோடு இன்னொரு கூட்டத்தின் கலாசாரத்தை யொப்பிடுவதே யன்றி, ஒரு பெருங்கூட்டத்திலுள்ள உட்பிரிவுகளின் கலாசாரங்களை ஒப்பிட்டுக் கொண்டிருப்பதல்ல அவைகளுக்குள் வேறுபாடுகள் இருப்பினும் பொதுவாக அம்சங்களையும் நிறையக் கொண்டிருக்கும். இவ்விதமாக இந்தியாவிலுள்ள இந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள் ஆகியோர் தங்களுக்குள் வித்தியாசம் கொண்டிருந்தாலும் பொதுவான அம்சங்களும் உடையவர்களாக இருக்கிறார்கள். அவை காரணமாக அவர்களிடையே காணப்படும் ஓர் ஐரோப்பியனைத் தனியாகப் பிரித்துவிடலாம். இதைச் சந்தேகிக்கிறவர்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலோ அல்லது பாதுகாப்பு நாடுகளிலோ அல்லது டொமினியன்களிலோ வாழும் இந்தியரின் நிலையைச் சற்று கவனிப்பாராக. இந்திய இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனியாக இரு கலாசாரங்களைச் சேர்ந்தவர்கள் என்றவர்களின் வாயடைக்கும் படி

யாக நிலைமை அங்கிருக்கிறது. தென் ஆப்ரிக்கனுக்கு அல்லது ஆஸ்திரேலியனுக்கு அல்லது கனடிய ஐரோப்பியனுக்கு அல்லது கென்யாவிலுள்ள ஐரோப்பியனுக்கு இந்தியன் எவ்வாறு தோன்றுகிறான்? அவன் இந்துவாயினும், முஸல்மானாயினும், சீக்கியனாயினும், பார்ஸி கிருஸ்தவனாயினும் யாராகயிருப்பினும் சரி. ஐரோப்பியக் கலாச்சாரத்துக்கு ஊனமிழைக்கவிடாதபடியும், வாழ்க்கைத்தரத்தைக் குறைக்கவிடாதபடியும் எந்த இந்தியனும் அவனுக்குரிய இடத்தில் வைக்கப்பட வேண்டியவனாகிறான். இந்த நிலைமை அடிமை நாட்டைச் சேர்ந்த இந்தியனுக்கு மட்டுமல்ல ஆகவே அவனைக் கீழ்மகனாக நடத்தலாமென்பதல்ல. சுதந்திர நாட்டினரான சீனரும் இத்தகைய கண்காணிப்பிலிருந்து தப்பமுடியாது. ஜப்பானியர் சமீப யுத்தம்வரையும் மதிக்கப்படாவிட்டாலும் மிகவும் கவனிக்கப்பட்டவர்கள். இவர்களும் ஐரோப்பியக் கலாசாரக் காவற்காரர்களிடமிருந்து தப்பமுடியாது. மேற்குக் கோளத்திலும் சரி, கிழக்குக் கோளத்திலும் சரி, வாழ்க்கைத் தரத்தைக்குறைக்க இவர்கள் அனுமதிக்கப் படமாட்டார்கள். ஆசிய ஐரோப்பியக் கலாசார வேற்றுமைகளை அடிப்படையாகக்கொண்டே இவ்வாறு வித்தியாசம் பாராட்டப்படுகிறது. இந்துக்களும் முஸ்லிம்களும் கூடி அரும்பாடுபட்டு, அதற்கென வாழ்ந்து ஒரு கூட்டுக் கலாசாரத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அது இந்தியக் கலாசாரமெனப்படுமென்பதை மறுப்பதெல்லாம் வெறும் உதவாக்கரைத் தனமே. இந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்கும் வித்தியாசம் இருக்கலாம். இருந்தாலும் அவர்களுக்கு பொதுவான இந்தியக்கலாசாரம் உண்டு. வெளிநாட்டானையும் இந்தியனையும் பிரித்துக் காட்டுவது இந்தக் கலாசாரமே அந்தவெளிநாட்டான் மேற்கிலிருந்தோ அல்லது கிழக்கிலிருந்தோ, புது உலகத்திலிருந்தோ அல்லது பழைய உலகத்திலிருந்தோ எந்தநாடு அல்லது கண்டங்களிலிருந்து வரினும் இந்தியக் கலாசாரம் அவனைத் துண்டாகக் காட்டிவிடும் இந்து முஸ்லிம்கள் ஒன்றுக்குள் ஒன்றாகி வாழ்ந்து வந்த நெடுங்காலச் சரித்திரத்தாலும், போரிலும் சமாதான காலத்திலும் ஒன்றுகூடிச் செய்த முயற்சிகளாலும் இப்படித்தான் வந்து நேருமேயொழிய வேறு விதமாக நிகழ்ந்திருக்க முடியாது இரண்டு மாங்கன்றுகளை ஒட்டவைத்தால் அல்லது ஒரு மாங்கன்றை மற்றொரு மரக்கிளையோடு ஒட்டுப் போட்டால், ஒட்டு மரத்திலிருந்து நல்ல ஜாதிப்பழம் கிடைக்கும். அவைகளைப் பிரிப்பதுதவறு; கொடுமையும்கூட எவ்வளவோ புயல்களைச் சமாளித்து, ஒன்றுசேர்ந்து வைரம் பாய்ந்து இவ்வளவு காலமானபிறகு அந்தமாதிரி பிரிப்பதற்கும் அவை கிள்ளுக்கீரையல்ல என்பதை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருக்கால் அம்முயற்சி வெற்றியடையுமானால் இரு சாராருக்கும் அழிவு, வலுக்குறைவு மேலும் நாலாபக்கங்களிலிருந்து கிளம்பும் எதிர்ப்புக்கும் தாக்குதலுக்கும் அவர்கள் இரையாகவும் நேரிடும்.

("இந்தியா பிரிக்கப்பட்டால்"...........
பாபூ ராஜேந்திர பிரஸாத்.)

தனி மந்திரி யோசனை

பொருளாதார பிரச்னைகளை மட்டும் கவனிக்க தனி மந்திரியை நியமிக்கும் யோஜனை இந்திய சர்க்காருக்குஇருந்து வருவதாகத்தெரிகிறது. சிறந்தயோஜனைதான். அவ்வித மந்திரி மிகவும் அவசியமென்பதில் சந்தேகமில்லை. விடுதலைக்குப்பிறகு நாட்டில் தோன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்னைகளுக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து தீர்க்காவிட்டால் அவைகளுக்கு பரிகாரமே இல்லாமல் போய்விட நேரிடும். ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் மந்திரி முதலாளித்துவ பிற்போக்கு மனப்பான்மையுள்ள கன்ஸர்வேடிவாக இல்லாமல் மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவமளிக்கும் முற்போக்கு நோக்கமுள்ளவராக இருக்க வேண்டியதவசியம் அப்பொழுதுதான் பிரச்னைகள் தீரமுடியும். ஒருபுரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வேலையும் இன்னொரு புரம் வாழ்க்கையின் அத்தியர்வசியத் தேவைப்பொருள்கள் சரிவர கிடைக்கும்படிச் செய்வதும் அகவிலை யேற்றத்தைத் தடுக்கவேண்டிய பொறுப்பும் சர்க்காருக்கு இருந்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது இருந்துவந்த பொருளாதார அந்தஸ்தையும் இன்று மக்கள் இழந்துவிட்டனர். வறுமையும் பணவரட்சியும் முன்பிருந்ததைவிட அதிகரித்திருப்பதுடன் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் அவர்களுடைய உழைப்பின் ஊதியத்துக்கும் வாழ்க்கைத் தேவைகளின் விலைவாசிகளுக்குமிடையே பொருத்தம் ஏற்படுத்த வேண்டியதும் அவசியம். பொருளாதாரப் பிரச்னைகள் பற்றிய அரசாங்கத்தின் முறைகள் மாறினால் மட்டுமே அது சாத்தியமாகும் உத்தேச மந்திரிக்கு விரிவான அதிகாரங்களும் மந்திரிசபை பூராவின் ஆதரவும் உதவியும் இருக்கவேண்டியதவசியம். இன்றைய நிலைமையில் உத்தேச மந்திரி நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கமுடியும்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.